www.tamilarangam.net

தமிழர்களை முன்னேற்றம் ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை.

# சர்வதேசதமிழர்

# SARVADESA TAMILER

Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement and solidarity.
Vol.4,Nr.4.May.97



பல்வைத்தியர் சத்தியவதி, புதல்வர்கள்:ரவிவர்மன், அருண், கணவர் க.கமலராஜா




அபிவிருத்திநிதிஅமைச்சர்: காரி நூர்கைம் லார்சன்

*Kari Nordheim-Larsen*
*Bistandsminister*

தென்,தென்.கிழக்காசிய ஒத்துழைப்பு
பாராளுமன்றஅங்கீகாரம் பெற்ற முதன்மைநாடுகள்

Samarbeidsregion Sør- og sørøstlige Asia
(P) Prioriterte land som vedtatt av Stortinget f.o.m. 1997

- AFGHANISTAN
- PAKISTAN
- INDIA
- NEPAL (P)
- BHUTAN
- BANGLADESH (P)
- SRI LANKA (P)
- VIETNAM
- LAOS
- KAMBODSJA



Samarbeidsregion Mellom-Amerika

- HONDURAS
- NICARAGUA (P)
- GUATEMALA
- EL SALVADOR

மத்தியஅமெரிக்க ஒத்துழைப்பு

Samarbeidsregion Sør- og sørøstlige Afrika og Mali
தென்,தென்கிழக்காபிரிக்கா,மாலி

- MALI
- ZAMBIA (P)
- ANGOLA
- ZIMBABWE (P)
- BOTSWANA
- NAMIBIA
- SØR-AFRIKA

- ERITREA (P)
- ETIOPIA (P)
- UGANDA (P)
- TANZANIA (P)
- MOSAMBIK (P)
- MALAWI (P)
- MADAGASKAR
- SWAZILAND
- LESOTHO
- MAURITIUS

Editor/publisher:N.S.Pirabu
Address:L.Hervigs vei 69 A
3035 DRAMMEN,Norway
Tel./Fax:00.47.32-813416
E-Mail:nsp@sn.no

www.tamilarangam.net



## பல்வைத்தியர் சத்தியவதி B.D.S(Norway) அவர்களுடன் ஒரு பேட்டி! - என்.எஸ்.பிரபு

நோர்வேக்கு,பலதமிழர்கள் 1983சிங்களதாக்குதல் கலவரத்துக்குபின்,ஜேர்மனி,இங்கிலாந்து,பிரான்ஸ் நெதர்லாந்த்,அவுஸ்ரேலியா,டென்மார்க்,சென்றதுபோல்,வரத்தொடங்கினர்.இலங்கையில்கல்வி,தொழில்வாய்ப்பு மறுக்கப்பட்டமையும்,உயிருக்கு ஆபத்தானசூழலும் உருவாகியதே இதற்கு அடிப்படைக்காரணம்.தமிழர்கட்கு வேறொரு முக்கியதொடர்பும் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.யாழ்.காரைநகரில் சீநோர் எனும் மீன்பிடிஅபிவிருத்தி திட்டத்தால்(கண்ணாடி இழைபடகுஉற்பத்தி) பல தமிழர்கள் நோர்வேஜியரான ஆஙெ பியுடோவ் போன்றோரின் நல்லெண்ணத்தை சம்பாதிக்ககூடியதாக இருந்தது.இதனால் முதலில் தமிழர்கள் இங்கு தொழில்வாய்ப்பு,நோர்வேமொழிகல்வி,என,அதிகமாகவரத்தொடங்கினர்.குறிப்பாக,யாழ்ப்பாணம்-பாசையூர்,அரியாலைவாழ்தமிழர்கள் இதில்,ஆரம்பகாலமுன்னோடிகள்என்பதைக்குறிப்பிடலாம்.முதலில்,வந்தவர்கள்தமது சதோதர,சகோதரியர்,மாமன்,மச்சான்,உறவினர்,நண்பர்கள் எனநோர்வேயின் தெற்கே கிறிஸ்ரியன்சான்ட், ஸ்ராவங்கரிலிருந்நு,வடக்கே நூர்கப்(வடதுருவம்)சிர்கனஸ்,பின்மார்க்,வாடோ,வாட்சோ வரை,மேற்கே பேர்கனில் இருந்து,கிழக்கே சாப்ஸ்பூர்க் வரை நோர்வே மொழியைப்பயில மக்கள் பாடசாலைகளில் அனுமதி பெற்றனர்.

ஒருவருடத்தில் முற்றிலும் அந்நியமொழியான நொஸ்க்கில் புலமைபெற்று பலர் மேற்படிப்பை ,மாலைவேலைகளுடன் தொடர்ந்தனர்.1986ல் தான் அகதிகளாக தஞ்சம்கோர தமிழர் நோர்வேவரத்தொடங்கினர் மாணவர்களாக வந்தவர்களில் பலர் கல்வியை தொடர்ந்து இந்நாட்டிலேயே நல்லபதவிகளைப்பெற்றுள்ளனர்.அவர்களில்ஒருவர்தான்,தற்போது-மோடும்-கொம்யுனில்,மாவட்டபல்வைத்தியராக,பணிபுரியும்,யாழ்ப்பாணம் நல்லசேகரம்பிள்ளையின் புதல்வி,திருமதி. சத்தியவதி.கமலராஜா அவர்கள்! அவர்களுடன் ஒரு கருத்தான பேட்டி இதோ:

1980ல் காகவிற்-ஒஸ் போல்கைஸ்கூல் அனுமதிபெற்று தனது 20ஆவது வயதில் நோர்வே வந்த இவர்,பின்பு 81-83ல் குறன்ஸ்மின்ட உயர்பாடசாலையில் பயின்று பேர்கன் பல்கலைக்கழகத்தில் பல்மருத்துவபடிப்பை மேற்கொண்டார்.இவர் யாழ்.சன்மார்க்கபாடசாலை,வைத்தீஸ்வராகல்லூரி பழையமாணவி ஆவார்.1991-95ல் ஃபூடோ, 95-97ல் ஃபாகனஸ், 1997இலிருந்து யெயிற்றுஸில் மாவட்டபல்வைத்தியராக பணிபுரியும் இவருக்கு ரவிவர்மன்(7),அருண்(1)என இரு அருமைப்புதல்வர்கள்!

கணவர்.க.கமலராஜா இறக்குமதி-ஏற்றுமதிதுறையில் ஈடுபட்டுள்ளார்.அன்பு,பண்பு,அடக்கம்,விருந்தோம்பல்,அமைதி நிரம்பிய இக்குடும்பம் அமைதியான ஓமட் கிராமத்தில் வாழும் ஒரேயொரு தமிழ்க்குடும்பமாகும்!

மேற்குநாடுகளில் பொதுவாயும்,நோர்வேயில் குறிப்பாயும் காணப்படும் அதிகரித்த பல்வருத்தங்களால்,பல்வைத்தியரின்சேவை,முக்கியமாக,விளங்குகிறது.சகலர்க்கும்,பல்பராமரிப்பு,மிகதேவையாக இருக்கிறது.காரணம் அதிகரித்தஇனிப்புபாவனையும்,அக்கறையற்றபராமரிப்பும்!அதனால் பற்றீரியபெருக்கமும்,பற்சூத்தை, தூநாற்றம்வீசலும்உண்டாகும்.துர்நாற்றம்ஏற்பட,பலகாரணமுண்டு.பல்ஈறுகட்கிடையே பற்றீரியாத்தாக்கத்தால் ஏற்படும்,சிதைவு,சீரற்றபராமரிப்பு,தொண்டைஅழற்சி,சுவாசகோளாறு,வயிற்றுப்புண் என்பனவற்றை குறிப்பிடலாம்.துர்நாற்றத்தை நாக்கை,நன்குவழிப்பதன்,மூலம்குறைக்கலாம்.

மேற்குநாடுகளில் பற்சூத்தை முக்கியபிரச்சனை,என்கிறார்,இவர்.எம்நாடுகளில் புளோரைட் குடிநீரில் உள்ளதால் பற்களுக்கு உறுதியைக்கொடுக்கிறது.நோர்வேகுடிநீரில்,புளொரைட் இல்லாததால்,குளிசை,பற்பசை மூலம்பெறலாம். ஒழுங்காக பல்வைத்தியநிலையம் சென்று சுத்தம்செய்தல்,பல்பராமரிப்புபற்றி தகவல்பெறல்,அன்றாடம் இருதடவை தூரிகையால் பல்விளக்கல், நம்மவர்க்கு முக்கியம்!வேப்பம்குச்சி,ஆலம்குச்சியால் துலக்கல் எளிமையானமுறை. எனினும் துாரிகையே ஈறுகட்கிடையே சுத்தம்செய்யும்.முரசை காயப்படுத்தாது.பற்பொடி எனாமலை தேய்ப்பதால் பாதுகாப்பு குறைவு.பல்குச்சி,பற்கயிறு மூலமும் பற்களுக்கிடையேயுள்ள உணவுப்பொருள் அகற்றல் முக்கியம்! 45 பாகையில் பற்தூரிகையை பிடித்து தீட்டுவது முக்கியம்.பாடசாலையில், பிள்ளைகட்கு எப்படி பல்லை பாதுகாப்பது? என பாடசாலை பல்மருத்துவர் பிரிவு அறிவுறுத்துவது இங்குள்ள நல்லமுறை!

18வயதுக்குட்பட்டோர்,முதியோர்,நோயாளிவிடுதியிலுள்ளோர்,வலதுகுறைந்தோர்க்கு பல்சோதிப்பு,சுத்திகரிப்பு இங்குஇலவசம். 19-20 வயதினர் 25வீதம் பணம் செலுத்தவேண்டும்.காப்புறுதிகந்தோர் சிலசெலவுகளை பகுதியாக ஈடுசெய்யும்.வருமானமற்றவர்க்கும் இங்கு இலவசசிகிச்சை உண்டு.

ஒழுங்காக பற்களை பராமரித்தால் பல்லை பிடுங்கவேண்டிவராது.முதலில் எக்ஸ்ரே எடுத்து பார்த்து பற்களின் periodentium ஒழுங்கமைப்பு மற்றும் நோய்களையும் கண்டுபிடிக்ககூடியதாகஇருக்கும்.

பின்பே சூத்தையை நிரப்புவதா?,பல்லை பிடுங்குவதா? என தீர்மானிப்பர்.

எமது உடம்பிலுள்ள நோய்எதிர்ப்புதன்மை குறைய,வாயிலுள்ள பற்றீரியா பெருக்கம் கூடும்.பிறப்பிலிருந்து,இறப்பு வரை பற்றீரியா எம் வாயினுள் இருக்கும்.தினமும் இருதடவை பல்துலக்கி சுத்தம்பேணினால் அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். எமது உணவுப்பழக்கவழக்கங்களையும் இனிப்புவகைகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் முக்கியம்

சிலர் பயேரியா எனும் நோயால் முழுப்பல்லையுமே இழந்துள்ளனர்.பரம்பரையாயும் இந்நோய் வரலாம். 14-15 வயதில் சிலருக்கு பற்கள்,ஈடாட்டம் கண்டசம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

இனிப்புவகைகள் அதிகம்சாப்பிடுவதால் பற்றீரியபெருக்கம்கூடி,வாயினுள் அமிலதன்மைகூடி,எனாமல் படை கரைந்து,மென்மையாகி,பற்சூத்தை,பல்ஈடாட்டம் வருகிறது.

பல்அடைப்புக்கு அமல்கம்(வெள்ளிநைத்ரேற்று),கொம்பசிட் பாவிக்கப்படுகிறது.அமல்கம் சிலருக்கு ஒவ்வாமையை (அலர்ஜி)த்தரலாம்.பிளாட்டினம்,தங்கப்பல் கட்டலும் தேவையெனில் இங்கு செய்யப்படுகிறது.

பல்லில் மஞ்சள்காவி பலவழிகளால் ஏற்படும்.சாப்பாடுவகை,புகைத்தல்,கோப்பி,தேனீர்,மருந்துகள் பாவனையாலும் ஏற்படலாம். உமிழ்நீரிலுள்ள உப்பும்,பற்றீரியா படையும் சேர்ந்து மஞ்சள்காவியை கடினமாக்கும்.இதற்கு நாம் இடம்கொடுத்தல் ஆகாது.அப்படி உருவாகின் பல்வைத்தியரிடம் சென்று சுத்தம் செய்துகொள்ளல் அவசியம்!

பல்சீரற்று வளர்தல் இளம்பிள்ளைகட்கு முக்கியபிரச்சனை!மேல்தாடை,கீழ்தாடையைவிட சற்றுபெரிதாக இருப்பதால் பற்கள் முன்நீட்டி வளரும்.இதற்கு பரம்பரைகைசூப்பல்,சூப்பிசூப்பல் போன்றவை காரணமாகும்,என்கிறார் இவர். மேல்தாடை,முன்தாடை அளவுசிறிதாக இருப்பதாலும் சீரற்றுவளரலாமாம்.

வசதிகுறைந்தநாடுகளில்பற்சுத்தம்,பற்றீரியாஎதிர்ப்பு வேப்பங்குச்சி போன்றவற்றிலுள்ள இயற்கைமருந்தால் செயல்படுவது மேலும் ஆராயப்படவேண்டியது.

நோர்வேஜியர்கள் பற்றிகூறுகையில்,அவர்கள் மரியாதையாக பழகுவார்கள்.வடநோர்வேயில் பல்வைத்தியர் வெளிநாட்டவரா?என ஆச்சரியப்பட்டு வியப்புடன் நோக்குவார்களாம்.ஆனால் அவர்கள் நல்லவர்களாம்.நடுநோர்வேயில் சற்று இனதுவேசம் உண்டாம்!நகரங்களில் பல்லினமக்கள் வாழ்வதால் துவேசம் குறைவாகவும்,தற்போதையஇடம், அருமையான இடம் எனவும் இருவரும் ஏகோபித்தகுரலில் கூறினர்.நோர்வேயின் பலபகுதிகட்கும் இடம்மாறுவது சுவாரசியமான அனுபவம்,எனினும் பிள்ளைகளுடன் அடிக்கடி மாறுவதில் சிரமமும் உண்டாம்.நோர்வேயிலுள்ள தமிழர்கள் பல்வைத்தியஆலோசனைகளை பெற உதவ இவர் தயாராக இருப்பதாககுறிப்பிட்டார்.சர்வதேச தமிழர் மூலம் கேள்வி-பதில்,ஆலோசனைகளை இவர் வழங்கவும் முன்வந்துள்ளார்.வாசகர்கள் தம்கேள்விகளை அனுப்பலாம்.தனது தொழிலில் திறமையுடன் பணிபுரியும் இவர்,வீணை,சமையல்கலையிலும் திறமையுள்ள, சமூக ஈடுபாடுள்ள குடும்பப்பெண்!

இவர் போன்ற பெண்கள் தான் இன்று புதிய உலகத்தமிழ்சமுதாயத்துக்கு தேவை!

**மறுஇதழில்:நோர்வேதொலைக்காட்சி-றூனே ராஜேந்திரம்,பேட்டி!**

**lay-out /frontpage:Ratnes.S.Drammen**

www.tamilarangam.net



சர்வதேசதமிழர்.1997.தொ.4.இ.4

## ஆசிரியர் கருத்து:

## தமிழர்களும் மனமும்!

உயர்ந்தமனம்,பரந்தமனம்,நல்லமனம்,இரக்கமனம் எனும் சொற்கள் மனதுக்கு மகிழ்வு ஊட்டும் சொற்களாகவே உள்ளன.தாழ்ந்தமனம்,குறுகியமனம்,கெட்டமனம், கடினமனம் எனும் சொற்கள் உலகின் எப்பகுதி மக்களுக்கும் விருப்பற்றதாகவே இருக்கிறது. இனிமையான சொற்கள் நம்வாழ்வில் உண்மையிலேயே செயல்பட தமிழர்களாகிய, நாம் பாடுபடவேண்டும்.அமைதியற்றவாழ்வு,அவதிவாழ்வு,பேராசைவாழ்வு,வன்முறைவாழ்வு,வறுமைவாழ்வு,பணவாழ்வு,பகட்டுவாழ்வு,அகதிவாழ்வு என பலவித வாழ்வும் உலகின் பலமூலைகளிலும் வாழும் மனிதர்களை பாதிப்படையச்செய்து அவர்தம் மனதை மாற்றிவிடுகிறது.

மனம் போல வாழ்வாய்!! என்பது பெரியோர் வாக்கு!வறுமையிலும் செம்மை,அவலத்திலும் பொறுமை, அவதியிலும் கனிமை,வன்முறையிலும் நீதி,பணத்திலும் பற்றின்மை, பகட்டிலும் எளிமை,அகதியெனினும் செம்மை,பதவியிலும் பணிவு!

இ[illegible] பொதுவாக மனிதர்க்கும் [illegible]க தமிழர்க்கும் மிகத் தேவை[illegible] விடயங்கள்!

மன[illegible]ல்,உடல் நல்லவைகளை [illegible]னைத்தல்,கூறல்,செய்தல், மனித[illegible]ழ்வினுயர்வுக்குஅவசியம். அது[illegible]மிழர்வாழ்வுக்கு முக்கியம்! உள்ள[illegible]தே உண்மை ஒளி,உண்டாயின் [illegible]க்கினிலும்,செயலினிலும் ஒளியு[illegible]! எனும் மகிழ்வும், பேரா[illegible] வாக்கியம், ஒவ்வொ[illegible]களிலும், ஒவ்வொரு[illegible]களிலும் எவ்வளவு ஆழமான தாக்கத்தை உண்டு பண்ணும், என்பதை நாம் அனைவரும் நம்மனத்தே உணர்வோமாக!

ஒருவருக்கொருவர் அன்பு,இரக்கம் மதிப்பு,அங்கீகாரம்,நம்பிக்கை, ஆதரவு இவற்றை வழங்க நமக்கு உயர்ந்தமனம் வேண்டும்! என நாம் என்றென்றும் பிரார்த்திப்போமாக!

தமிழர்கள் உயர்ந்தமனத்தினர், நட்புமனத்தினர்,எளிமை மனத்தினர்,உண்மைமனத்தினர், நல்லமனத்தினர்,நீதிமனத்தினர்,நேர்மை மனத்தினர் என உலகு எம்மை கூறுவதற்கு நாம் எம்மை மேலும், மேலும் சீர்படுத்திக்கொள்ளல் வளமான,அமைதியான,பிரகாசமான வாழ்வுக்கு மிகஅவசியம்!

## சிந்தனைத்தடாகம்(Think Tank)

### நேற்று. இன்று. நாளை:அமைதி உலகு!

### Før:Nå:Framtid: Om harmonisk Verden!

காலனித்துவநாடுகளும்,ஏனைய பணக்காரநாடுகளும் வர்த்தகம்,சூழல்,கடன், உதவிவழங்கல்(அவசரஉதவி,அகதிஉதவி)போன்ற விடயங்களில் அபிவிருத்தி அடைந்துவ[illegible] நாடுகளுடன் தமது தொடர்பை வளர்த்துக் கொள்வதை அண்மைக்காலத்தில் அவதானிக்கலாம். நோர்வே அரசு 26.02.1993ல் வடக்கு–தெற்கு உதவிக்கொள்கை,அபிவிருத்தி அடைந்துவரும்நாடுகளுடனான ஒத்துழைப்பு பற்றி பாராளுமன்றில் 11நிபுணர் கொண்ட குழு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது.

அந்தந்தநாட்டு இயற்கைவளங்களை கவனமாக பாவித்து பாரிய மனிதநல் வாழ்வு,அபிவிருத்திக்கு உதவுவது என்பதே இங்கு முக்கிய கொள்கை! வறுமை ஒழிப்பு,சூழல்பாதுகாப்பு,சமாதானம், அபிவிருத்திக்கு வறியநாடுகட்கு உதவுதல் என்பதே நோர்வேஜிய தென் கொள்கையின் அடிப்படையாகும். குறைந்தநல்வாழ்வு, நடுத்தரநல்வாழ்வு நாடுகளை இனம்பிரித்து உதவிகளை உதவிஅமைப்புகளுடாக ஏற்றபடி வழங்கல் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. வறுமையை ஒழித்து, வாழ்வுத்தரம் நிரந்தரமா[illegible]உ[illegible]ர உதவி, அதன்மூலம் பாரிய சமூக,பொருளாதாரநீதியை பிராந்திய, தேசிய, உலகளாவியரீதியில் ஏற்படுத்தல்,யுத்தம்,முரண்பாடுகளுக்கான அடிப்படைக்காரணங்களை குறைத்தல்,: சமாதானதீர்[illegible]களுக்கு உதவல்,சனநாயக மேம்பாட்டுக்கு உதவல்,: பூமியின் சூழல், இயற்கைவளங்களை பொறுப்பாக பாவிக்கவும்,நிர்வகிக்கவும் ஊக்கம் தரல் என்பனவே நோர்வேயின் தென் கொள்கையின் நோக்கங்களாகும். பணக்கார தொழிற்றுறை நாடுகளின் உற்பத்தி,நுகர்ச்சி உலகவளங்களை அருமையாக கவனமாக பாவித்து உதாரணம் காட்டுவதாகஅமையவேண்டும்,என்பதில் நோர்வே அக்கறையுள்ள நாடாக இருக்கிறது.

பணக்காரநாடுகள் வறியநாடுகட்கு புத்தி சொல்லிக்கொண்டு மட்டுமிராமல் தம்மளவில் அதனை முதலில் நடைமுறைப்படுத்தவேண்டும்! என நோர்வே போன்ற சிலநாடுகள் எண்ணுவது வரவேற்கத்தக்கதே!

பொருளாதாரம்,தொழில்வாழ்வு,கலாசாரம், சூழல், பாதுகாப்பு போன்ற துறைகளில் நோர்வேயின் பங்கு எதிர்காலத்தில் அபிவிருத்திஅடைந்துவரும்நாடுகளுடன் அதிகரிக்கும் என நிபுணர் ஆணைக்குழு நம்புகிறது.

வடக்கு–தெற்கு உறவுகள், மாறிவரும் சர்வதேசநிலைமைகளால் புதியபரிமாணத்தை எடுத்துவருகிறது.

விரைவான மாற்றங்கள், வளரும் முரண்பாடுகள்(உ-ம்: மத்திய கிழக்கு,சிலஆசிய,ஆபிரிக்க,லத்தின்அமெரிக்க உள்நாட்டுயுத்தங்கள்) , அரசியல், பொருளாதார, சமூக, சூழல் பிரச்சனைகள் உலக சமுதாயத்தையே மாற்றியமைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் பணக்காரநாடுகள், அவை நமது பிரச்சனை அல்ல!என கண்ணை மூட முடியாது.சில இடங்களில் சூழல்பாதிப்பால் வறுமை நிலவுவதையும்(காடழிப்பு–வெள்ளம்–கிராமங்கள் அழிவு: உ-ம்: பங்களாதேஷ்) ,வளங்களின் அதீதநுகர்வும்,சூழல்மாசடைதலும் வேறுஇடங்களிலும்(உ-ம்: ரஷ்யா) மோசமாக இடம் பெறுவது,தடுக்கப்படவேண்டிய ஒன்று! அரசியல் பாதுகாப்பு என்பது அடிப்படையில் பொருளாதார பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது,எனும் வாதம் தமிழர்களும் சிந்திக்கவேண்டிய ஒன்றே!

1பிலியனுக்கு(1000மிலி)மேற்பட்டமக்கள் உலகில் கடுமையான வறுமையில்வாடி, தத்தம் அடிப்படைத்தேவைகளானஉணவு,உடை,வீடு,குடிநீர்,சுகாதாரம்,தொழில்,கல்வி வாய்ப்பின்றி அல்லலுறுகின்றனர். பாரிய பரந்துபட்ட வறுமை, சூழல் மாசு படல் போன்றவையே இன்று உலகை எதிர்நோக்கும் முக்கியசவால் என்பதை பலவறியநாட்டு தலைவர்கள் உணர்வதாகத்தெரியவில்லை.அவர்கள் லஞ்சம்வாங்கல்(உ-ம்: ராஜீவ்காந்தியே போபர்ஸ்பீரங்கி வர்த்தகத்தில் 350மிலி. குரோணர் லஞ்சம் வாங்கியதில்,முக்கிய ஆள் என,சுவீடிஷ் டெலிவிசன் ரெக்ஸ் கூறியும்,இந்தியகாங்கிரசும், சில பத்திரிகைகளும் அதனை மூடி மறைத்து நேரு குடும்பம் தெய்வீக குடும்பம் எனும் மாயையை உண்டாக்கின்றன) ,லஞ்சம் கொடுக்கல்(உ-ம்:நரசிம்மராவ் நம்பிக்கைஇல்லாத்தீர்மானம்,வெற்றிபெற 8லட்சம் டாலரை பல எம்.பிக்களுக்கு வழங்கியதாககூறப்படும் வழக்குஉளது) வன்முறைபாவித்தல், சொத்துசேர்த்தல் (உ-ம்:முன்னாள் தமிழகமுதல்வர் ஜெயலலிதா,நண்பி சசிகலா அன் கம்பனி தம் ஆட்சிக்காலத்தில் ஏழைமக்கள் துயர்துடைப்பதைவிடுத்து, சொத்து சேர்த்த உலகமகாஅறிவீனம்) (வரும்)

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.திலீபன்.22.166733;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஐ.றோயலா துறொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா;துறம்சோ:கே.சிவராஜா; வார்டோ: குகனெறியப்பன்;பேர்லவோக்:இரா.விஜய்:ஐ.ரி.ரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்.கரன் பிறத்வோக்: குமார் கல்வோக்:கனகசிங்கம் .

www.tamilarangam.net



## அயலவரைத் தேடி..!

கர்நாடக மாநிலத்தில் வாழும் மக்களில் கன்னடமொழி பேசும் மக்களே பெரும்பான்மையினராவார். ஆனால் பெங்களூரில் வாழ்பவர்களில் 60 வீதமான்வர் தமிழர், 40 வீதமானவர் கன்னடர்.
அண்மையில் கர்நாடகத்தமிழர் நிலை பற்றி நேரில் கண்டறிய பெங்களூர் சென்றேன்.
பேரூந்தில் பெங்களூர் நோக்கி பயணமானபோது என்னுடன் பயணித்த அனைவரும் தமிழிலேயே உரையாடிக்கொண்டு வந்தனர். ஆனால் பெங்களூர் எல்லையைத் தொட்டதும் கன்னடத்தில் உரையாட ஆரம்பித்து விட்டனர். எனக்கு திகைப்பு மேலிட்டது. எதற்காக இவ்வாறு மொழியை மாற்றிக் கொண்டனர்?
கர்நாடகத்தில் வேற்றுமொழி பேசக்கூடாதா?வாழக்கூடாதா?எனும் கேள்விகள் என்னைக் குடைந்தெடுத்தன. அருகில் இருந்தவரிடம் மெல்ல விசாரித்தேன். ஆனால் அது பற்றி பேசவே அவர் மறுத்து விட்டார்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு காவிரி நடுவர் மன்ற ஆணையை ,நடுவணரசு ஆவண த்தில் பதிவு செய்யாதே! எனக் கூறி பல நூறு தமிழர்களை கன்னடர் கொன்று குவித்தனர். பல தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தனர். தமிழர்கள் தமது சொந்த நிலங்களையும் இல்லங்களையும் விட்டுத் தமிழ் நாட்டிற்கு ஓடி வந்தனர். தமிழ் நாட்டரசு அவர்களை ஓசூருக்கருகில் வரவேற்றது. ஏதிலிகளை வரவேற்கிறோம்! என்ற பதாகையொன்றும் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அதைத் தவிர தமிழ்நாட்டரசு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வேறு ஏதும் செய்யவில்லை. அந்த 1991 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 13 14 15 ஆகிய நாட்களில் நிகழ்ந்த கொடுமைகள் தமிழ் மக்களை இவ்வாறு மாற்றியிருக்கலாம், என்று எண்ணிக் கொண்டேன்.
பெங்களூரின் பழைய பெயர் வெங்காலூார் என்பதாகும். வெங்காலூாரைத்தான் கன்னடர் தமது விருப்பத்திற்கு கன்னடமாக்கி பெங்களூர் என்று மாற்றி விட்டனர்.
1956 இல் இந்தியா மொழி வழி மாநிலங்களாகபிரிக்கப்பட்ட பொழுது வெங்காலூர் கோலார் போன்ற தமிழ்ப் பகுதிகள் , கர்நாடக மாநிலத்தின் கைக்குள் சென்று விட்டது.
வெங்காலூரில் தமிழறிஞர் குணா அவர்களைச் சந்தித்தேன். இவர் திராவிடத்தால் வீழ்ந்தோம், தமிழர் வரலாறு போன்ற அரிய நூல்களை தமிழ் உலகிற்கு தந்துள்ளார். சர்வதேச தமிழர் இதழை அறிமுகம் செய்தேன். இதழைப் பார்வையிட்ட அவர் ,கணணியில் புதிய அச்சு எழுத்துக்களைப் பயன்படுத்தலாமே! எனக் கூறினார்.
கர்நாடகத்தமிழர் பற்றியும் கன்னடர் களைப்பற்றியும் நான் அவரிடம் கேட்டபொழுது இங்கே பழந்தமிழ் கல்வெட்டுக்களை சிதைத்தும் பல்வேறு தமிழ் நினைவுச் சின்னங்களை உடைத்தும் தமிழ் சமூகத்தின் வருத்தத்தை கன்னடர் சம்பாதித்துக் கொண்டு வருகின்றனர். தமிழ்ப் பெயரில் உள்ள ஊர்கள் வீதிகள் முற்றிலும் கன்னடமயமாக்கப்பட்டுள்ளது. வீட்டில் தமிழும் வெளியில் கன்னடமும் பேசவேண்டிய நிலை உள்ளது. கறுப்புத்தோலைக் கண்டாலே கன்னடர் வெறுப்புற்று எரிந்து விழுகின்றனர்.வெங்கலுார் தமிழ்மண் தமிழர்மண்! தமிழர்பூமியில் அயல் மொழியில் பேசுவதும் பயில்வதும் அழகா? கொடுமையல்லவா இது? தமிழரல்லாதவர்கள் தமிழர்களாகத் தம்மை அடையாளங்காட்டிக் கொண்டு தமிழர் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக இருந்து வருகின்றனர்.வெங்காலூரின் தமிழ் சங்கத்தின் செயலர் கூட தமிழரல்ல. ஆனாலும் எதிர்ப்புகளுக்குஊடேயும் தமிழ்,தமிழர் ஆதரவுக் குரல்கள் தொடர்ந்து ஒலிக்கின்றன.எனபதில் கூறினார். தற்பொழுது விழுதுகள்,எனும்நூல்வெளி வர உள்ளதாகவும் கூறினார்.

நான் வெங்கலுாரில் இருந்து புறப்படுமுன்னர் நிகழ்ந்த ஒரு நிகழ்வை குறிப்பிட விரும்புகின்றேன். குளம்பியகத்திற்கு தோழருடன் ஈருருளியில்சென்றேன். வழியில் பெற்றோல் போடச் சென்ற பொழுது அங்கிருந்த 15 வயது மதிக்கத்தக்க சிறுவனிடம் தோழர் பிப்டீன் ரூப்பீசுக்கு போடப்பா!என்று ஆங்கிலம் கலந்த கன்னடத்தில் கூறினார்: சிறுவனோ பிப்டீனா? பிப்டியா? என வினாவினான். பிப்டீன்! என்றார் தோழர்.அதை கன்னடத்திலேயே சொல்ல வேண்டியது தானே என்று அவன் கேட்க கன்னட மக்களது மொழிப்பற்றை நான் அறிந்து கொள்ள முடிந்தது.அதேவேளையில் அதை நேரில் கண்ட எனக்கு கர்நாடகத் தமிழர் ஆற்றவேண்டிய செயல்கள் குறித்த கேள்விகளும் சிந்தனையும் எனக்குள்எழுந்தது.

**புதுச்சேரி. ச. வேல்முருகன்**

## பெங்களூர் கடிதம்...!

*அன்புடையீர்!*

*வணக்கம்!சர்வதேசதமிழர் இதழை படிக்க நேரிட்டது.சிறந்த நடுநிலை ஏடு! வருங்காலத்தில் பிறமொழிச் சொற்களைத் தவிர்க்கவும்.திருமதி.த.மனோகரன் எழுதிய இசையும்,தமிழும் கட்டுரை அருமை! ஈழத்தமிழர் கோரப்படகுவிபத்தின் சோக செய்தியை படித்ததும்,அவர்கட்கு விடிவு வருவதுஎப்போ?அதற்குள் அழியப்போகும் தமிழர்உயிர்கள் எத்தனை?என எண்ணியதும் கண்கள் இரத்தக்கண்ணீர் வடிக்கின்றன.சர்வதேச தகவல்சேவைசெய்திகள் நன்றாக உள்ளன.கவிதைகளும் நன்றாகவே உள்ளன.*
*பெங்களூரின் ஜக்கூர் பகுதி பள்ளியில் 230 ஈழதமிழ் அகதிக்குழந்தைகள் பசி,பட்டினியுடன் படித்துவருகிறார்கள்.இவர்கட்கு தினமணி நாளேடு பணம்சேகரித்துஉதவி வருகிறது.மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில்,பங்காரு அடிகளார் ஓர்ஆண்டுக்கு இக்குழந்தைகட்கு உணவளிப்பதாககூறி 2 மாதங்களாக இக்குழந்தைகட்கு நல்ல சத்துணவு வழங்கி ஆதரவுதருகிறார்.*

பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்181.4713060;மு.ஆறுமுகம்
செ.நாகேந்திரன் 181.5532190கனடா:மா.மகிந்தன்;இ.வளர்மதி: நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஜ.இராமச்சந்திரன்

புவித்தமிழர் நட்புறவு நடுவம்–
அமைப்பின் செயலாளரும்,பெங்களூர்
தமிழ்ச்சங்க வாழ்நாள் உறுப்பினரு
மான,பாவலர் ந.தமிழ்மறவன்,ஆகிய
நான் இக்குழந்தைகட்கு உதவிகள்
பெற்றுத்தர பலவழிகளிலும் முயற்சி
கள் எடுத்துவருகிறேன்.

515 இராணுவதள செயற்றிட்ட
தோழர்கள் உணவுப்பொருட்கள்
அளித்துதவினர்.

பெங்களூர் போக்குவரத்துகழகத்
தொழிலாளர்கள் 1001ரூபா நன்
கொடையும் அளித்து, பள்ளியில்
சேதமடைந்தவற்றை தாமே பழு
துபார்த்துகொடுத்து,தொடர்ந்து
உதவுவதாக சொன்னார்கள்.அல்சூர்
காவிரி விற்பனைஅங்காடி, துணி
தயாரிப்பு தொழிலகஉரிமையாளர்
திரு.தங்கராஜ் அவர்கள்
குழந்தைகட்கு துணிமணிகள்,
கரம்போட்,பந்து,ஆகியவிளையாட்டு
பொருட்களை கொடுத்தார்.

நோய்தீர்க்கும் விலையுயர்ந்த
மருந்துகளை,டாக்டர் பக்தவத்சலம்
உதவியுடன்,நான் வழங்கியுள்ளேன்.
தொடர்ந்தும் எனதுஇவ்வுதவியை
வழங்கவுள்ளேன்.

உலகச் நமிழர்களே! நீங்களும்
இக்குழந்தைகட்கு உதவவிரும்பின்
தயவுசெய்து என் முகவரிக்கு
தொடர்புகொள்ளுங்கள்:

*பாவலர் ந.தமிழ்மறவன்*
*(N.Venkatesan,118,Vth cross,*
*Cambri.. 'ayout,Ulsoor,*
*Bangalo.c . 30008,India)*

**திருச்சிக்கடிதம்......!**

சர்வதேச தமிழர் இதழ்கள்
வந்தன!மகிழ்வைத் தந்தன!!
உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்கு
தாங்கள்ஆற்றும்பணி மலையென
உயர்ந்தது.கடலென விரிந்தது.
வளர்ச்சிக்கு எம் வாழ்த்துக்கள்!
வரலாற்றில் தமிழீழம்–எனும் என்
நூலுக்கு சர்வதேசதமிழரில் வழங்கி
யுள்ள மதிப்புரைக்கு நன்றி!
உலகநாடுகளில் வாழும் தமிழினமக்
கள் அடையும் துன்பங்களை
துடைத்திட வழியில்லை. ஐ.நா.
சபையில் கோரிக்கை வைப்பதற்கும்
உரிமையில்லை.காரணம்:தமிழனுக்கு
என ஒரு சுதந்திரநாடில்லை!
அன்று ஆதித்தனார் அவர்கள்
இதை உணர்ந்தார்.ஆங்கிலவல்லா
ண்மையை எதிர்த்திட துணிந்தார்.
அய்ரிசு மக்கள்,–நாம் அய்ரிசு
இயக்கம்–தொடங்கியதுபோல,தமிழ்
மண்ணில் ஆதித்தனார்,–நாம்தமிழர்
இயக்கம்–1942ல் தொடங்கினார்.
தமிழ்ஈழம் உள்ளிட்ட சுதந்திரதமிழ்
நாட்டை வற்புறுத்தினார்.ஆனால்
1967ல் அந்தஇயக்கமும்,அதன்கொள்
கைகளும் திராவிடஇயக்கங்களில்
கலந்தன!கரைந்தன!!சுதந்திரத்தமிழ்
நாடு,சுதந்திரதமிழ்ஈழம் எனும் தமிழ்
தேசிய தன்னுணர்வு தமிழ்இளைஞர்
களிடம் இன்று மீண்டும் அரும்பி
யுள்ளதை காண்கிறோம்.

இவ்வுணர்வுகளை வளர்த்திட–நாம்
தமிழர் இயக்கம்–மீண்டும் புதுப்பிக்
கப்பட உள்ளது.ஆர்வமுள்ளோர்
கீழ்க்கண்டமுகவரிக்கு,தொடர்புறுக:

**தமிழக உணர்ச்சிக்கவிஞர்**
**சிங்காரவேலன்**
(Kavignar Singaravelan,
2,Kaveri Salai,Devadanam,
Trichy-620002,Tamilnadu,India)

**மாஸ்கோ கடிதம்..........!**

இக்காலத்தில் உலகமெல்லாம் சமய
ங்களின் வெளிவேசமே அதிகமாகி
விட்டது.மனிதர்கள் எம்மதத்தினரா
யினும் சரி,தத்தம் மதங்களின் வெளி
ப்படையான சடங்குகளைப்பற்றியே
கவலை கொள்கிறார்கள்.பணத்திடம்
நமக்குள்ளபேராசையினால் பிறருக்கு
எவ்வளவு துன்பம் விளைகிறது,வி
ளையக்கூடும்,என சிறிதும் சிந்திப்ப
தில்லைஉலகில் உள்ள பெரும்பண
க்காரர்களில்,பலர் போதைபொருள்கட
த்தல்,ஆட்கடத்தல்(முகவர்தொழில்)
கொள்ளை,கொலை,ஆயுதக்கடத்தல்
ஊழல்,லஞ்சம்,கறுப்புசந்தை ஆகிய
வற்றால் நீதி,அநீதி பாராது முன்னு
க்கு வந்தவர்கள்.இவர்கள் கடவுள்
இல்லை என்று,கூறும்,நடக்கும்
மனிதர்களாகவே பெரும்பாலும்உளர்.
கடவுள் இருப்பின் இன,மத,சாதி,
மொழி,நிறவேறுபாடுகளால் யுத்தம்,
அழிவு,வறுமை,துன்பம்,அக்கிரமம்
போன்றவை உலகுக்கு வாரா! என
வாதிடுகின்றனர்.நமக்குள்ள ஐம்புலன்
களுடன்,பகுத்தறிவையும் தந்த
இறைவன் எது சரி?எதுபிழை?என்
பதையும் அறியும் ஆற்றலையும்
தந்துள்ளான்.அதனை மனிதர் ஒழுங்
காக பாவித்தால் உலகம்நிம்மதியாக
வாழும்.தம் குற்றம் குறைகளை
உணர்தல்,சுயவிமர்சனம் செய்தல்
மனம்போனபோக்கெல்லாம் போகாத
சுயகட்டுப்பாடு ஆத்மாவை கெடுக்
காது.கடவுள்பற்று,கடவுள்பயம்
போய்விடின் உலகில் கேடுபெருகும்.
மனிதர் நீதிநெறியை கைவிட்டு,மிரு
கங்களுக்கு ஒப்பாகிவிடகூடாது!
எச்சமயம் சார்ந்தவரும்,சமயமற்ற
வரும் சன்மார்க்க நன்னெறியை
ஒழுகிவாழ்தல் உலகஅமைதிக்கு
முக்கியமாகும்.

உங்கள்அறிவுரையால் ஒருவராவது
மனம்திருந்தி இறைவனை நினைந்
தால் அதுவே இறைவனுக்குதரும்
நன்றிக்கடனாகும்.நெறிதுறந்து ஒழு
கும்மனிதர்களால் உலகுக்கு தீமை
யே கிட்டுகிறது.தத்தம் சமயங்களில்
திடமானஉறுதியுடன்,நீதிநெறிபற்றி
ஒழுகுதல் ஒவ்வொருவரதும் தலை
யாயகடமை!இதற்கு பங்கம்வரின்
உலகு,நிலைதடுமாறி சின்னாபின்ன
மாகிவிடும்.மனிதஇனத்துக்கு,பெரும்
கேடு வரும்.

இறைவனால் தரப்பட்ட சரீரம்,மனம்,
அறிவு உங்களை உணர்ந்துகொள்
ள உதவும்.அநீதி,ஆணவம்,அக்கிர
மத்தின் முடிவு என்ன? என நாம்
உணர்ந்துவைத்துள்ளோம்.எமது
தீயகுணங்களை விலக்கி நல்லொழு
க்கத்தைஏற்று வாழப்பழகவேண்டும்
நாம் மனிதர்! என்பதற்கு நாம்
தகுதியானவராக வெகுமதியை எதிர்
பாராது எத்துணை கஷ்டம்வரினும்
நம் கடமை செய்து வாழப்பழக
வேண்டும்.நீதி வாக்கியங்களை மன
ப்பாடம்செய்வதைவிட நடைமுறை
யில்செய்துவருவது சிறப்பு.நீதிநெறி
யில் நடப்பவனுக்கே இறுதிவெற்றி!
பாராட்டுகருதாது மனிதர் ஒருவரு
க்கொருவர் உதவவேண்டும்.
உழைப்பு,கல்வி,எளிமை,தூய்மை,
நம்பிக்கை, ஒழுக்கத்துடன் இறை
வனை தேடுங்கள்!காண்பீர்கள்!
தர்மத்தை நாம் காப்பாற்றினால்
அது எம்மை காப்பாற்றும்!!

**ரூபியஸ் சுகுமார்......மாஸ்கோ**

திரைக்கலைஞர்.பிரசாந்த்;சேலம்:இராசமாணிக்கம்திருச்சி:ஜான்ராஜ்தேவர்; டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:க.இலக்குமணசுவாமி
புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவி ராமானுசம்,கதிர்.சம்பத்குமார் கேரளா:
ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்:இரா.ப.முரளி,பாவலர்.ந.தமிழ்மறவன்

www.tamilarangam.net



## கேட்டீர்களா சேதி..!

1ஒஸ்லோவில் அண்மையில் நடந்த தமிழர் கைப்பந்தாட்ட கழகங்களிடையேயான கைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் கடைசிநேரம் சில புதியவிதிகள் தமிழ்ச் சங்கத்தால் புகுத்தப்பட்டமை குறித்து சிலர் சர்வதேசதமிழரிடம் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.இது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல! எனவும் கூறியுள்ளார்கள்.

2.இலங்கையில் 20000 சிங்களபடையின் வன்னிமுற்றுகை புலிகளின் கடுமையான தாக்குதலால் மந்தநிலையை அடைந்துள்ளதாம்.இரத்ததானம் வழங்குமாறு சிங்கள அரசு அடிக்கடி வேண்டுகிறதாம்.
224 பறயனாலங்குளபொலிசார் தம் ஆயுதங்களை செட்டிகுளம் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு குட் பை!சொல்லிவிட்டு தத்தம் வீடு சென்றதால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனராம்.இந்தப் பொலிஸ் நிலையத்தை கடந்த சித்திரையில் பிரதி பாதுகாப்புஅமைச்சரும்,சந்திரிகாவின் மாமனுமான அனுருத்த ரத்வத்தை திறந்துவைத்ததுதான் பகிடிக்குரியது! எனக் கூறப்படுகிறது.சந்திரிகா,நிலைமையை உணர்வாரா?
மொரவேவ,பொலிஸ்நிலையத்தை வழமை போல் புலிகள் அதிரடித்தாக்குதலால் தாக்கியபோது தனது உடையை கழற்றிவிட்டு சாதாரண உடையில் நிலத்தில் வீழ்ந்து இறந்தவன் போல கிடந்த சிங்களபொலிஸ் இன்ஸ்பெக்டர் உயிர்தப்பி தனது சாகச செயலை, பத்திரிகையாளரிடம் விபரித்துள்ளார்.இவருக்கு நிச்சயம் மெடல் வழங்க வேண்டும்!என,சிலதமிழர்கள் கூறுகிறார்கள். இளம்புலிகள் இந்த சிரேஷ்டஅதிகாரி மீது மிதித்துக்கொண்டு ஓடியதையும் பொறுத்திருக்கிறார்! ஐயோ! பாவம்!!
போகிறபோக்கை பார்த்தால், சமிரேயை லோறன் கபிலா பிடித்தது போல், இலங்கை முழுவதையும் புலிகள் கைப்பற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை போலும்!
இந்தியா கோழைத்தனமான சிங்களஅரசுக்கும்,சிங்களபடைகட்கும் உதவுவதைவிடுத்து வீரமான புலிகளை ஆதரிப்பது நீண்ட நோக்கில் பிராந்தியபாதுகாப்பு,இந்தியநலனுக்கு நல்லது!என பல அரசியல்அவதானிகள் கூறுகிறார்கள்.ஏனெனில் உண்மையில் சிங்களஅரசு சீனா,பாகிஸ்தானுடன் தான் விசுவாசமாக இருக்கிறதாம்..இந்தியா யதார்த்தத்தை உணரவேண்டுமாம்(இந்திய புலனாய்வு–றோ,இதனைக்குறித்துக்கொள்க)

3 பாலஸ்தீனநிர்வாகத்தில்,நோர்வே வழங்கிய 2.25 பிலியன் குரோணர் நிதியில் ஊழல் நடந்துள்ளதாக அறியவருகிறது.அபுமசான் தனக்காக பாரிய வில்லா ஒன்றை கட்டியுள்ளாராம்.வெளிநாட்டு பாலஸ்தீனரும் ஆடம்பரவில்லாக்களை கட்டுகிறார்களாம். எல்லா புரட்சியுத்தங்களும் தத்தம் யுத்தவீரர்களையும்,தத்தம் சிந்தனையாளர்களையும், தத்தம்,லாபமீட்டுவோரையும் கொண்டுளது. பாலஸ்தீனயுத்தத்தில் யுத்தவீரர்கள் இறந்துவிட்டனர்!சிந்தனையாளர்கள் கொலைசெய்யப்பட்டுவிட்டார்கள்.லாபமீட்டுவோர் இயலக்கூடியளவு காலத்தை பிரயோசனமாக பயன்படுத்துகிறார்கள்,என காசாவின் சாதாரண பொதுமகன் ஒருவர் கூறியுள்ளார்.
இது,இலங்கையரும் சிந்திக்கவேண்டியது!

4.நோர்வேயில் அதிக உல்லாசபயணிகள் வரும் முக்கிய இடங்கள் வருமாறு:
1.கொல்மன்கோலன் 2.கிறிஸ்ரியன்சான்ட் மிருகவனம் 3.துசன்பிரிட்,விகிங்லாந்த் 4.புளோய்–பாணன்(ரயில்),பேர்கன் 5.விகிங்சிப் மியுசியம் 6.புளொம் பாணன் 7.குண்டபொசன் குடும்பபூங்கா 8.பிரடறிக்ஸ்ராட் பழையநகர் 9.நிடரோஸ்தேவாலயம்,துறொண்கைம்10.காடலாந்த்கண்ணாடிதொழிற்சாலை

5.1990ல் நோர்வே வந்து,ஆப்கானிஸ்தானியர் எனகூறி அரசியல்தஞ்சம் பதிந்து நிரந்தர வதிவிடஅனுமதி பெற்ற பாகிஸ்தான் குவேட்டாநகரை சேர்ந்த குலாம் குடும்பம் முதலில் டென்மார்க் விசாவுக்கு பாகிஸ்தானிலிருந்து விண்ணப்பித்ததாயும் அதன் பிரதி நோர்வேபொலிசார் வசம் கிட்டியதாலும்,அதில் பாகிஸ்தானியபிரசை என குறிப்பிட்டதாலுமே அவர்களது நிரந்தரவதிவிட அனுமதி ரத்தாகியது!என அறியவருகிறது. குலாமின்சகோதரர் டென்மார்க்கிலிருந்து ஆப்ரன்போஸ்ரனுக்கு அளித்தபேட்டியில், அது தன் சகோதரர் அல்ல!எனவும் தன்சகோதர,சகோதரிகள் தம்பாஸ்போட்டை இவர்களுக்கு விற்றிருக்கலாம். இவர்கள் படம் மாற்றி வந்திருக்கலாம், எனவும் கூறியுள்ளார்.திருப்பி அனுப்பப்பட்ட குலாம் குடும்பம் பாகிஸ்தான் விமானநிலையத்தில் வைத்து நோர்வே திருப்பிஅனுப்பப்பட்டு இங்கு நீதிமன்றமுடிவுக்காக காத்திருக்கின்றனர்.லண்டனிலுள்ள ஆப்கான்தூதரகம் ஒஸ்லோவிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் , இவர்கள் ஆப்கானியர்! என கூறியதை நீதி அமைச்சும்,நீதிமன்றும் நம்பவில்லையாம். டென்மார்க் விசாபடிவம் இவர்களை காட்டிக்கொடுத்ததால் மேலும் 50 பெரியவர்கள்,20 சிறியவர்கள்,நாடுகடத்தப்படவுளராம். 5–10வருடம் நோர்வேயில்தங்கியுள்ள கசாரா எனும் பாகிஸ்தானியசிறுபான்மையரான இவர்கள் பொய்த்தகவல்கொடுத்ததால் சகலவதிவிடஅனுமதிகளும் ரத்தாகுமாம்.
ஆனால் அவர்கள்,தாம் ஆப்கானியரென்றும் சிறிதுகாலம் பாகிஸ்தானில் சீவித்ததென்றும் கூறியுள்ளனராம்.வேறு ஐரோப்பியநாடுகளில் பல வருடம் இருந்துவிட்டு இங்குவந்து பதிந்தவர்களுக்கும் இதேநிலை வரலாமாம்!
6.இலங்கை,சென்றுதிரும்பிய,நோவாஸ் குழு வடகிழக்கில் தமிழர்கள் அனைவருமே புலி எனச் சந்தேகிக்கப்படுவதாகவும்,மோசமாக,படைகளால் நடத்தப்படுவதாயும்,கைது செய்யப்படுவதாயும் கூறியுள்ளது.

7.1988ல்,ஒருதாய்லாந்தவர் தான் கம்போடியர் எனக்கூறி நோர்வேயில்,அரசியல்தஞ்சம்கோரி வதிவிட அனுமதி பெற்றாராம்.மனைவி 2 பிள்ளைகளுடன்(நூர்யகான்(8), நசரின்(9)) வாழ்ந்துவந்தவர் மணவாழ்வுமுறிந்ததும், உண்மையை பொலிசாரிடம் கக்கினாராம். தாயும் இறக்க,பொய்த்தகவல் அடிப்படையில் பெற்ற வதிவிடஅனுமதி,பிரசாஉரிமை ரத்தானதாம்.பிள்ளைகள் இருவரும் உறவினரிடம் இருக்க,அவர்களை நாடுகடத்தும் உத்தரவு பறந்தது.பலநோர்வேஜியர் போர்க்கொடி உயர்த்தியதால் நீதிஅமைச்சு உத்தரவை வாபஸ் வாங்கியது.எமது குழந்தைகள் இங்குவாழட்டும்!என அவர்களுக்காக வேகே பத்திரிகையும் குரல்எழுப்பியது.

8.சுவீடிஷ் பிரதமர் பேர்சன் நோர்வேயின் கடுமையான குடியேற்றக்கொள்கையை கண்டித்துள்ளார். தம்நாடு சுமார் 15000 பேருக்கு இடமளிக்க நோர்வே மிகக்குறைந்தளவே அகதிகளை எடுத்து தன் சர்வதேச கடமையை புறக்கணிப்பதாக அவர் குற்றம்சாட்டினார்.

9.நோர்வே 802 வெளிநாட்டவரை திருப்பி அனுப்ப,98மிலியன் குரோணரை(1995ல் 62.9 மிலி. 1996ல் 34.9மிலி)2வருடத்தில் செலவு செய்துள்ளது.379பேர் வெளிநாட்டுக்கொள்கையை மீறியதற்காகவும்,423பேர் கிறிமினல் குற்றங்கட்காக தண்டனைபெற்றவர்களாவர்
10.சனிக்கிரகத்துக்கான–10வருட,ஆளில்லா ஆய்வுப்பயண–ராக்கட்டான காசினி,அமெரிக்க நாசாநிலையத்தால் ஐப்பசி 97ல் விண்ணுக்கு அனுப்பப்படும். 2தரம் காசினியை (புவி)சுற்றிவரும் காசினி புதன்,வெள்ளி போன்ற பலகிரகங்களையும் அண்மித்து சென்று படம்பிடித்து பூமிக்கனுப்பும்.

11.பசியின்றி,தலைகத்து,மெலிவு,தசைநோ, பொருத்துநோ, சோர்வால் மேற்குலக வைத்தியம் பலவும்செய்து,சரிவராத ஒரு நோர்வேஜியர் இயற்கைமருத்துவ நண்பியின் ஆலோசனைப்படி உள்ளிப்பூண்டை தொடர்ந்து நாளாந்தம் மெல்லாமல், விழுங்கினாராம்.1கிழமை முடிவில் 8–10 சமீ நீளமான வெண்புழுக்கள் மலத்துடன்,வெளியேறியதாம். கீழைத்தேச இயற்கை மருத்துவ முறைகளையே நாம் அதிகம்பாவிக்க வேண்டும்.இஞ்சி,மிளகாய் போன்றவையும் அதிகம் பாவிப்பதால் நோய் வராது!என அந்த நோர்வேஜியர் ஆப்ரன்போஸ்ரனில் கட்டுரை எழுதியுள்ளார்.
12. 25வீதமான,சுவீடிஷ்காரர்,தற்காலகல்வி, தொழில்துறையில் போட்டியிடமுடியாத முட்டாள்களாக உள்ளதாக, சுவீடிஷ்ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளார்.

13.சமாதானத்துக்காக நோபல்பரிசு தரும் நோர்வே 1996ல் ஆயுதம்,வெடிமருந்தை 1 பிலியன் குரோணருக்கு ஏற்றுமதி செய்துள்ளமை,உலகசமாதானவிரும்பிகட்கு பேரிடி

டென்மார்க்:ச.யோகேந்திரம்:வ.க.பரமநாதன்: பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171: இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதூரன்; க.சண்முகலிங்கம் பி.ஏ.எல்.எல்.பி;மா.தேவகௌரி பி.ஏ.சிறப்பு
கைதையூரான் குமரகுருபரன் பி.காம்.;சுகந்தி தில்லையம்பலம் யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சிறுகதை: பெற்றால் எல்லாம் பிள்ளைகளா? - - -யாழ்.செ.நடேசு**

யாழ்நகருக்கு வடக்கே,ஓர்அழகிய கிராமம் இருக்கிறது. இக்கிராமத்தில் வாழும் பெரும்பாலோர் மண்ணை நம்பி வாழும் விவசாயிகள்.இங்கே தான் இராமுப்பிள்ளையும் வாழ்ந்து வந்தார். அவருக்கு குடியிருக்கும் சிறுதுண்டு நிலத்தை தவிர வேறு நிலபுலம் கிடையாது.அவர் குத்தகைக்கு நிலத்தை எடுத்து அதில் விவசாயம் செய்து வந்தார். கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தார். இவருக்கு பிள்ளைகள் நால்வர். மூத்தவன் கண்ணன். அடுத்து மூன்றும் பெண்கள். மகனை படிப்பித்து நல்ல பதவியில் இருத்த வேண்டும் என்பது அவர் ஆசை. மகன் நல்ல நிலையில் இருந்தால் சகோதரிகளை நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து வாழ வைப்பான்! என்று அவர் நம்பினார். கஸ்டத்தையும் பாராமல் கண்ணனைக் கல்லூரியில் சேர்த்தார். கண்ணனும் ஆர்வத்தோடு படிப்பைத் தொடர்ந்தான். தன் திறமையால் ஆசிரியர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றான். 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது அவனுடன் கூடப் படித்த நண்பர்கள் சிலர் பெற்றோருக்கு தெரியாமல் தம்மை இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர். இதனால் கண்ணனுக்கும் இயக்க சிந்தனை வளரத் தொடங்கியது. படிப்பில் நாட்டம் குறைந்தது. கல்லூரிக்குப் போவதையும் நிறுத்திக் கொண்டான். மகனின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு இராமுப்பிள்ளை பயந்தார். இனியும் கண்ணனை இங்கு வைத்திருந்தால் அவன் இயக்கத்துக்குப் போய்விடுவான்! என்று எண்ணினார். தனது குடியிருப்பு நிலத்தை ஈடுவைத்து ஒருலட்சம் ரூபாவை தனக்கு நன்கு தெரிந்த பிரயாணமுகவர் ஒருவரிடம் கொடுத்து கண்ணனை ஜேர்மனிக்கு அனுப்பிவைத்தார். ஜேர்மனிக்கு போவோர் இடைவழியிலோ அல்லது எல்லையிலோ பிடிபட்டு திருப்பி அனுப்பப்படுவது இராமுப்பிள்ளைக்குத் தெரியும். அதனால் தன் மகன் தடை ஏதும் இன்றி ஜேர்மனியை சென்றடைய வேண்டும் என்று அவர் வேண்டாத தெய்வம் இல்லை. கைஎடுக்காத கோவிலும் இல்லை. அவர்,வேண்டுதல் வீண் போகவில்லை. ஜேர்மனியை சுகமாக சென்றடைந்து விட்டதாக கண்ணன் கடிதம் எழுதியிருந்தான். கடிதத்தைக் கண்டபிறகுதான் அவருக்கு கவலை நீங்கியது.

ஜேர்மனி சென்ற கண்ணனுக்கு இருவருடங்களாக வேலை கிடைக்கவில்லை. ஜேர்மன் அரசு கொடுக்கும் அகதிப்பணத்தை சிக்கனமாக செலவு செய்து மிகுதியை வீட்டுக்கு அனுப்பிவைப்பான். போரினால் விவசாய முயற்சிகள் தடைப்பட்ட வேளையில் அவன் அனுப்பி வைக்கும் பணம் அவரை வாழவைத்தது. மூன்றாம் வருட ஆரம்பத்தில் கண்ணன் தனக்கு வேலை கிடைத்து விட்டதாக எழுதினான். இராமுப்பிள்ளையர் மனம் அளவிலா மகிழ்ச்சி கொண்டது. கண்ணன் இடைக்கிடை பணம் அனுப்பிக் கொண்டு வந்தான். அவரும் பெண்களுக்கு சில நகைகளை செய்து கொண்டார். 4ம் வருடம் ஆரம்பமானபோது கண்ணனிடம் இருந்து பணம் வருவது நின்றது. கடிதமும் வருவதில்லை. மகனுக்கு பல கடிதங்கள் எழுதினார். எதற்கும் பதில் இல்லை. 3 மாதங்களாக கடிதத்தை எதிர்பார்த்தார். அவருக்கு ஏமாற்றமே கிடைத்தது. மகனின் நிலைமை தெரியாது கலங்கினார். போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டு சிறையில் வாடுகிறானோ! என்று கூட அவர் மனம் எண்ணியது. என்ன செய்வது என்று தெரியாது மனம் கலங்கிக் கொண்டு இருக்கையில் அவர் நண்பர் வேலுப்பிள்ளையின் மகன், மோகன் ஜேர்மனியில் இருக்கும் ஞாபகம் வந்தது. மோகன் ஜேர்மனிக்கு போவதற்கு இராமுப்பிள்ளையர் வேண்டிய உதவிகள் செய்தவர். மோகனுக்கு கடிதம் எழுதினால் அவன் கண்ணனைத் தேடிக்கண்டு பிடித்து தனக்கு விபரம் எழுதுவான் என நம்பினார். உடனே மோகனுக்கு விபரமாக கடிதம் எழுதி தன் மகனின் முகவரியையும் வைத்து அனுப்பினார். கடிதம் கிடைத்ததும் மோகன் கண்ணனின் இருப்பிடத்தை தேடிக் கண்டு கொண்டான். மோகனின் இருப்பிடத்துக்கும் கண்ணனின் இருப்பிடத்துக்கும் 100 கிமீற்றர் தூரம். இருந்தும் கஸ்டத்தைப் பாராது கண்ணனை சந்திக்க சென்றான். வீட்டை அடைந்ததும் அழைப்பு மணியை அழுத்தினான். சிறிது நேரம் சென்றதும் அழகான ஜேர்மன் பெண் கதவைத் திறந்தாள். அவளைக் கண்டதும் மோகன் திகைத்தான். ஒருவேளை தவறான முகவரியாக இருக்குமோ என்று எண்ணினான்.இருந்தும் தன்னை ஒருவாறு,சமாளித்துகொண்டு கண்ணன் இருக்கிறாரா? என்று கேட்டான். அவரும் இருக்கிறார் என்று சொல்லி அவனை அழைத்துச் சென்றுஇருக்கையில் இருக்கவைத்து விட்டு உள்ளே சென்றாள். சில நிமிடங்கள் சென்றதும் உள்ளே இருந்து கண்ணன் வந்தான். மோகனைக்கண்டதும் வியப்படைந்தவனாய் அவன் பக்கத்தேவந்து அமர்ந்தான். வந்தநோக்கம்பற்றி விசாரித்தான். உன்தந்தையிடம் இருந்து எனக்கு கடிதம் வந்திருக்கிறது. அவர் உனக்கு எத்தனையோ கடிதங்கள் போட்டாராம். நீ எதற்கும் பதில் எழுதவில்லையாம். உன் நிலைபரம் தெரியாது தாங்கள் கவலைப்படுவதாகவும் உன்னைத் தேடிக் கண்டு பிடித்து உன்னுடன் கதைத்து விபரமாகத் தனக்கு கடிதம் எழுதும்படியும் அக்கடிதத்தில் எழுதியிருக்கிறார். நீ பணம் அனுப்பாவிட்டாலும்,கடிதமாவது எழுதினால் என்ன என்றான் மோகன். கண்ணன் சிரித்து விட்டு என் கடிதத்தையா அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நான் அனுப்பும் பணம்தான் அவர்களுக்கு முக்கியம். என்னால் இனி அவர்களுக்கு பணம் அனுப்பமுடியாது. நீ பார்த்த அந்தப் பெண்ணை நான் காதலித்து மணம்செய்து கொண்டேன். எனது உழைப்புஎங்களுக்கே போதாமல் இருக்கிறது.

கடன்பட்டுத்தான் நாங்கள் வாழ்க்கை நடத்துகிறோம். இந்த நிலையில் நான் எப்படி அவர்களுக்கு பணம் அனுப்ப முடியும். பணம் இன்றி எழுதும் கடிதத்துக்கு வரவேற்பு இருக்கப் போவதில்லை. இதனால் நான் அவர்களை மறந்துவிட்டேன்! இனி அவர்களும் என்னை மறக்கவேண்டியதுதான்! என உறுதிபடக் கூறினான். கண்ணன் மனத்தை மாற்ற எவ்வளவோ முயன்று பார்த்தும் மோகனால் அதில் வெற்றி பெற முடியவில்லை. கடிதமாவது உன் பெற்றோருக்கு எழுதுவது உன் கடமை என்று வலியுறுத்திக் கூறிவிட்டு தன் இருப்பிடம் திரும்பினான். வீட்டுக்கு வந்த மோகன் உடனடியாக விபரமாக இராமுப்பிள்ளைக்கு கடிதம் எழுதினான். இராமுப்பிள்ளை மோகனின் கடிதத்தை 2 மாதமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்து மனம் தளர்ந்துபோனார்.

மாத்தளை: தவ.சஜிதரன் திருகோணமலை:மதுமாரி ,செ.கனகரத்தினம் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்: இரா.கனகரத்தினம் அட்டன்:பாலா சங்குப்பிள்ளை;குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்:எஸ்கதிர்காமநாதன்: 41.12724336; இரா. கலாதரன்;அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி

www.tamilarangam.net



ஒவ்வொருநாளும் அவருக்கு ஒவ்வொரு யுகமாக கழிந்தது. தபாற்காரனை எதிர்பார்த்து வெளித்திண்ணையிலேயே பகல் முழுவதும் இருப்பார். தபாற்காரனின் மணியோசை கேட்டதும் ஓடிச்சென்று கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். ஆவலோடும் பரபரப்போடும் கடிதத்தை பிரித்து நின்றபடியே வாசித்தார். கண் கலங்கியது. கைகால் நடுங்கியது. மயங்கி தடால்!என நிலத்தில் விழுந்து விட்டார். சத்தம் கேட்டு மனைவியும் பெண்கள் மூவரும் ஓடி வந்தனர். விழுந்துகிடந்த இராமுப்பிள்ளையை தாயும் இரு பிள்ளைகளும் தூக்கி திண்ணையில் கிடத்தினர். கடைசிப்பிள்ளை தூரத்தே விழுந்து கிடந்த கடிதத்தை எடுத்து பத்திரமாக வைத்துக் கொண்டாள். இராமுப்பிள்ளைக்கு இருதயத் துடிப்பு நின்றுவிட்டது. அவர் இறந்துவிட்டதையுணர்ந்து ஓவென்று கதறி அழுதனர். அயலவர்களும் வந்து பார்த்து விட்டு அவர் இறந்துவிட்டதாக உறுதிப் படுத்தினார்கள். அயலவர்கள் எல்லாரும் சேர்ந்து அவரின் இறுதிக் கிரியைகளைச் செய்து முடித்தார்கள். இராமுப்பிள்ளை சடுதியாக இறந்த காரணம் தெரியாது. தாய் கதறி அழுவதைக் கண்ட இளைய மகளுக்கு தான் எடுத்து வைத்திருக்கும் கடிதத்தின் ஞாபகம் வந்தது. கடிதத்தை எடுத்து உரக்க வாசித்தாள். தாய்க்கு எல்லாம் புரிந்தது. தன் மகன் தகப்பனுக்கு எமனாக மாறியதோடு தங்களுக்கும் துரோகியாக விட்டானே என்று கதறி அழுதாள். இராமுப்பிள்ளை இறந்து 31 ம் நாளும் வந்தது. அன்று செய்ய வேண்டியதெல்லாம் அயலவரின் உதவியோடு செய்து முடிக்கப்பட்டது.

இராமுப்பிள்ளை இறந்ததை அறிந்த ஈட்டுக்காரன் ஈட்டை மீளும்படி நெருக்கினான். அவர்களுக்கு ஈட்டை மீளும் சக்தி இல்லை. எனவே அவன் நிலத்தை தன் பெயருக்கு எழுதிக்கொண்டு அவர்களையும் வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டான். ஆதரிப்பார் யாரும் இன்றி அவர்கள் அனாதை ஆனார்கள். அகதிமுகாமில் தஞ்சம் புகுந்தார்கள். நிவாரணத்தில் கிடைப்பதைக் கொண்டு அரை குறையாக வாழ்கிறார்கள். அந்தப் பெண்களுக்கு யார் வாழ்வுஅளிக்கப் போகிறார்கள்? இப்படி எத்தனை குடும்பங்கள், தெருவில் நிற்கின்றனவோ? யார்கண்டார்.

## சர்வதேச தமிழர் கவியரங்கு.

### நீ பகைவென்று வாழும் நாள் வருமே!

மீசை வளர்க்கின்ற தமிழின மக்களே
வீட்டுக்கோர் ஆண்பிள்ளை சேர்ப்பீர்
–ஈழ
விடுதலைப் போரில் பங்கேற்பீர்!

பிறக்கும்குழந்தைகள் சுதந்திரமூச்சினை
பெற்றிடச் செய்யவே வாரீர்–மறு
பேச்சில்லை மண்மீட்கும் போரில்!

ஈன்ற நம்அன்னையர் இழக்கின்றார்
கற்பினை
இனி என்ன வேலைநும்வீட்டில்.–அட
எழுவீரே கிளிநொச்சிக் காட்டில்!

கூட்டுசிறையிலே குயிலையடைத்தாலும்
குயில்பாட்டு வெளியிலேகேட்கும்–உன்
கோரிக்கை உலகினை ஈர்க்கும்!

இழந்தோமே யாழ்கோட்டை என்பதுன்
ஏக்கமோ?
இலையுதிர்ந்து துளிர்வதைப் பாரும்.
நாளை
இருள்நீங்கி ஒளி வந்தே சேரும்!

கதவின்றி வீடுகள்காத்துக் கிடக்குதே
காளைநீ திரும்பும் நாள்உண்டு– யாழ்
கடல் மீன்கள் பாடுமே அன்று.

பாறை பிளந்துமே ஊற்றுக்கண் தேடிய
பரம்பரை சார்ந்ததமிழ் மகனே–நீ
பகைவென்று வாழும் நாள் வருமே!

**உணர்ச்சிகவிஞர் சிங்காரவேலன்**

---

### புகை என்பது பகை!

புகை என்பது மனிதஉயிருக்கு பகை
புகையை புறக்கணி யாவரும்புறப்படு!
அதிகப் புகை கக்கும் வாகனங்களை
அறவே ஒழித்துக் கட்டுவோமே!
அதிபுகைகக்கும் தொழிற்சாலைகளை
அவசியம் உடன் மூடிவிடுக!
உணவுமட்டுமல்ல காற்றுக்கலப்படமும்
உடலுக்கு கேடுகளை விளைக்கும்!
சுவாசக்காற்று சுத்தமாக இருந்தால்
சுவாசிக்கும் மனிதனின் ஆயுள் நீளும்!
அனைத்துநோய்களின் அவதிகள்யாவும்
அதிகப்புகையின் விளைவே ஆகும்.!
கழிவுநீரை தேங்க விடாதே!
மலேரியா நோயை வாங்கிவிடாதே!
சுற்றுப்புறத்தை சுத்தமாகவைத்தால்
உடலும் உள்ளமும் சுத்தமாகும்!

**இரா.இரவி................மதுரை**

### ஏற்றமும்இறக்கமும் உண்டானால்!

சாதிகளில்லை என்ப தறியாமை
சமத்துவம் பேசல் குறைப்பிரசவம்!
பகுப்புண்ட எதிலுமே சாதியுண்டு
பகைப்புலம்நாடுவதில்தான் தவறுண்டு!

தாவர வகையிலும் சாதியுண்டு
தவழ்ந்தோடும் நதிகளிலும் சாதியுண்டு!
நாளிலும் பொழுதிலும் சாதியுண்டு
நற்றமிழிலும் கூடவே சாதியுண்டு!

பருவத்தில்தானும் உண்டு சாதிகள்
பண்பாட்டிலும் மலருதே சாதிகள்!
கடமையில் கூடவரும் சாதிகள்
கண்ணில்காணும் எதிலுமே சாதிகள்!

சாதிகள் இல்லையேல் தேவைகள்
பாரிடும் உலகினில் மானிடர்!
நாகரீகம் எழுதிட ஏணிகள்
நகர்ந்திடும் இல்லாது பேனைகள்!

ஏற்றமும் இறக்கமும் உண்டானால்
ஏற்படும் அங்கேதான் சாதிகள்!
தோற்றமும் மறைவும் இரண்டானால்
தொடரும் எல்லாமே சாதிகள்!

சாதியை வைத்துப் பிழைப்பவர்
சண்டாளச்சாதியாய் மாறுவர்!
ஊரையும்பேரையும் உறிஞ்சிடும்–இவர்
உணர்வற்ற சாதியாய் சாகுவர்!

**ஆரையம்பதி க.சபாரத்தினம்**

---

### கருங்குயிலின் கவிதை....!

கருங்குயிலின் கவிதை
கன்னல்போல் இனித்தது!
உருவத்தில் நீ கருமை
பருவத்தில் நீ இனிமை!
நீ அழகில்லை தான்–இசையோ
புதுமைப்பலா போலாகும்!
மாதுளங்கனி யதிற்சுவை
போதும்! பூங்குயிலே எனக்குஒரு
பா கற்றுத்தா! என் கவியில்
கற்பனை தடைப்படுகிறது–அந்தத்
தடைக்கல்லை உடைத்திடு
உன் மோனக்கீதம் இசை!
அதிலே யென் கற்பனைகள்
பற்பலவாய் ஊறட்டும்!பூங்குயிலே பாடு!!

**க.இலக்குமணசுவாமி.....மதுரை.6**

---

### உறுதியோடு இரு....!

காரம் வாசம் வீசினால் கரப்பான்பூச்சி
அந்த இடம் நாடாது!
தாரம் பாசமாய் இருந்துவிட்டால்
கணவன்மனம் கண்டவளிடம் ஓடாது!

**ரூபியல் சுகுமார்-மாஸ்கோ**

ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ்துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்றெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; வ.சத்தியவான்; ஜேர்மனி:க.செந்தில்:0230478452;த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வே.நக்கீரனார்

# முத்தமொன்றின் முத்திரை!

பார்க்கும் கண்கள் கறுப்போ,நீலமோ?
காதல் பசுந்தரை எல்லோர்க்கும் பச்சையே!
ஏழையோ,? எளியவனோ?
நிறம்...கறுப்போ,? வெள்ளையோ?
காதல் விமானத்தில்,யாவரும் விமானியே!

இலட்சுமி நோர்வேயில் நங்கையரானதால்
இலட்சுமி கடாட்சம் இங்கே வந்ததோ?
வேலைத்தலத்தில் வெள்ளைப் பெண்ணொருத்தி—என்
உள்ளமதைக் கொள்ளை கொண்டாள்.

பார்வையில் அவனைக்
கடைக்கண்ணால் விழுங்கிட
அவளும் அதை ஏற்றுக் கொண்டாள்
சமஉரிமை கொண்ட
நோர்வே நாட்டின்—ஓர்
சராசரி நங்கையவள்

வந்தும் கதைப்பாள்,இணைந்தும் வருவாள்
கையில் பிடிப்பாள் கட்டியும் அணைப்பாள்
தொட்டதும் அவளிடம் விலகவில்லைக் கற்பு
அது அவளுடன் கட்டுடன் இருந்ததால்!

ஏ நனைத் தீயில் நினைவுகள்
ம ழுகென உருக
ங்கும் இதயத்தில் ஓர் இதமான
தாங்காததோர் வெடிப்பு.

அழகிய இறக்கையில்
மயங்கிய மனிதனுக்கு
றக்கும் பறவை,தனக்கென நினைப்பு.
ந்து அவள்
க்காய் அலைகையில்
பின்னால் அலையும் பேதை என் நினைவு

வெக்கத்தைக் கக்கம் வைத்து
கூச்சம் விட்டுக் கேட்டபோது
திருமணமாகி ஒரு பிள்ளை! என்றாள்
கல்யாணமானவளா,
என்றதும் ஒரு கணம்
காதல் குதிரை காலடி மறந்தது.
பிள்ளை என்றதும்
பின்னோக்கிப் பறந்தது.
குனிந்த கண்கள் தரையில் கோலமிட
நலிந்த நினைவுகள் நாணி நின்றன.

நல்நங்கையின் நாவிதழ்
மீண்டும் கண் விழித்தது.
காதல் கப்பல்கள்
கரை கட்டினாலும்
தரை தட்டுவதில்லை
கணவனெனும் தெப்பமே—எம்
இதயத்தில் தரைதட்டும்

நாங்கள்
நட்பெனும் அலைகளில்
இணைந்து மிதப்பதுண்டு
இழுந்தோ,அமிழ்ந்தோ மிதப்பதில்லை
என்றவள்
கட்டியணைத்து முத்தமும்
தந்தாள்.
அந்தமுத்தம் —என்
இதயமுத்தம் பெருக்கிற்று.
தூய்மையான என் இதயத்தில்
புனிதமான அன்பு மலர் பூத்தது.
உள்ளமொன்று உள்ளதென்ற
உண்மை மறந்த—என்
கலாச்சாரத்தப்புக் கணக்குகளுக்கு
முத்தமொன்று முத்திரை தந்தது!
நல்நட்புக்கு உட்பொருளும் தந்தது!

## பெண் விளக்கு

காற்றில் அணையும்
குத்துவிளக்கு
கடவுள் அருகில்
கர்ப்பக்கிருகத்தில் வைத்துப்
பூசை செய்யப்படுகின்றது!

அழுது வடியும்
மெழுகுதிரியும்
யேசுவின் அருகில்
பூசிக்கப்படுகிறது!
காற்றில் அணையா
அரிக்கன் லாம்புகள்
கணவன்மாரினால்
அடுக்களையில் வைத்து
அடித்து நொருக்கப்படுகின்றன!
அம்மியடியில் வைத்துக்
கும்மியடிக்கப்படுகின்றன!

## சிறகடிப்பு

எண்ணப்பறவை சிறகடிக்க
ஆண்டவன் பெண்ணைப்படைத்தான்.
அவள் விழிசிட்டு சிறகடிக்க
வதைபடுதே எம்இதயமலர்!

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புருணை: வி.எஸ்.சிவகுமார் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:மு.பத்மா
மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் அருண் பேராசிரியர்.இர.த.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர
சேகரன்; யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்க்கவியரசு கண்ணதாசன்

## கண்ணதாசனின் காலம்

**டாக்டர் சச்சி சிறீகாந்தா,யப்பான்**

1962ம் ஆண்டிலே கவிஞர் கண்ணதாசனின் சுயசரிதையின் முதற் பாகம் வனவாசம் வெளியாகியது. இப்போ 35 ஆண்டுகள் கழிந்துவிட்டன. அந்நூலின் முன்னுரையில் கவிஞர் எழுதினார்.

சுயசரிதம் எழுதுகின்றவனுக்கு இரண்டு பெருமைகள் வேண்டும். ஒன்று, அதை எழுதும் போது அவன் புகழ் ஓங்கி நிற்கவேண்டும். இரண்டு, அவன் வாழ்வில், வியக்கத்தக்க சாதனைகள் நிகழ்த்தியிருக்க வேண்டும். இந்த இரண்டும் இருந்தால் தான் அவனது சரித்திரத்தைப் படிப்பதற்குச் சிலபேர் கிடைப்பார்கள். என்னைப் பொறுத்தவரை, என் புகழ் குன்றிலிட்ட விளக்காக ஒளி வீசுகின்றதென்று நான் பெருமைப்பட முடியாது......

நான் என்று எழுதுவதற்குத் தகுதி போதாது என்ற தன்னடக்கத்துடனேயே அவன் என்று என்னைக் குறிப்பிட்டேன்....... நடுத்தரக் குடும்பத்தின் சாதாரண மகனுக்கு வயதும், மனதும் வளர்ந்ததிலிருந்தே கதை தொடங்குகிறது. 1943லிருந்து 1961 ஏப்பிரல் வரை என் வாழ்க்கை நடந்த விதம் இதில் வருணிக்கப்பட்டுள்ளது."

அப்போது அவருக்கு 35 வயது மட்டுமே நிரம்பியிருந்தது. 1945ம் ஆண்டிலே நடிகர் டி.வி.நாராயணசாமியின் நட்பின் மூலமாக அறிஞர் அண்ணாவின் மேடைப்பேச்சைக் கேட்டு மனங்கொடுத்தார். இதனால் திராவிட இயக்கக் கொள்கையில் ஈடுபட்டு, எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி சக்ரபாணியின் தொடர்பு மூலமாக, அவரின் தம்பி எம்.ஜி.ஆர், மற்றும் மு.கருணாநிதி போன்றோருடன் பழக்கம் ஏற்பட்டு, 1949ம் ஆண்டிலே திராவிடமுன்னேற்றக்கழகத்தின் தாபக உறுப்பினரில் ஒருவராகத் தேறினார். பின்னர் 1961ம் ஆண்டு ஏப்பிரல் மாதத் தொடக்கத்தில் இருந்து, தி.மு.க. வை விட்டு விலகும் வரை நடந்த சம்பவங்களை வனவாசம் நூலிலே விவரித்துள்ளார்.

35 ஆண்டுகளுக்கு முன் கவிஞர், "என்னைப் பொறுத்தவரை என் புகழ் குன்றிலிட்ட விளக்காக ஒளி வீசுகின்றதென்று நான் பெருமைப்பட முடியாது" என எழுதியதிலே தன்னடக்கம் இருந்தது. கடந்த 35 ஆண்டுகளில், கவிஞரின் புகழ் உலகத் தமிழர் மத்தியில் குன்றிலிட்ட விளக்காக ஒளிவீசத்தான் செய்கிறது. அவருக்கு முன் சென்ற நூற்றாண்டின் தமிழ்க் கவிஞர்களுக்கும் அவருக்குப் பின்வந்த தமிழ்க் கவிஞர்களுக்கும், கிடைக்காத கவியரசு எனும் பட்டம், கண்ணதாசனுக்குக் கிடைத்தது.

## இலங்கைத் தமிழர் பற்றிய கவிதைகள்

*" துளிர்க்காதா இலங்கையின் தமிழர் வாழ்வு ?*
*சுடுகாடு போகும் வரை தொல்லைதானா ?"*

என்று இலங்கைத் தமிழர்களுக்காக அன்றைய இந்தியப் பிரதமர் பண்டிதர் நேருவுக்கு குறையிட்டவர் கவியரசு கண்ணதாசன். 1956–58ம் ஆண்டுகளிலே இலங்கைத் தமிழரின் அவல நிலை பற்றி அவர் "இலங்கைத் தமிழரும், நேருவும்" எனுந் தலைப்பிலே குமுறிய 48 வரிக் கவிதையிலே எழுதிய வரிகள் 40 ஆண்டுகள் கடந்த பின்பும் நெஞ்சைத் தொடும்படியாக அமைந்துள்ளன.

எட்டு வரிகளை மட்டும் தெரிந்து தருகின்றேன் கீழே:

*" கொதிக்கின்ற நெஞ்சத்தைத் தேற்றுவார் யார் ?*
*குமுறி எழும் கண்ணீரை நீக்குவார் யார் ?*
*வதைக்கின்ற முள்வேலி மாற்றுவார் யார் ?*
*வாடிவிழும் நிலை மாற்றி வழங்குவார் யார் ?*
*கதியின்றித் திகைக்கின்ற தாயும் சேயும்*
*கால் பார்த்து நடக்கின்ற மாதராரும்*
*சதிக்கூட்டம் மத்தியிலே புறாக்கூட்டம் போல்*
*தடுமாறும் நிலை மாற்ற வல்லார் யார் ? யார்?"*

"இலங்கையில் வாழும் என் தமிழ்த் தோழி" எனுந் தலைப்பிலே இன்னொரு நீண்ட கவிதையையும் (158 வரிகள்) கவிஞர் 40 ஆண்டுகளுக்கு முன் எழுதினார். அதனில், இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைக்கு "அன்றைய தமிழன் விட்ட பிழை" எனும் கருத்துப்பட எழுதிய முதல் 32 வரிகளை பாருங்கள்.

*" தோழி நின் கடிதம் கண்டேன்*
*துவண்டது நெஞ்சம் ! ஐயோ*
*ஈழவர் நாட்டில் நீயும்*
*இன்புறுங் கணவர் தாமும்*
*ஆழியார் அலைகள் மோத*
*அழிவதை எண்ணுங் காலை*
*பாழுமித் தமிழர் நாட்டின்*
*'பாப'த்தை நினைக்கின்றேன் யான்!*

*படை கொண்டு மோதி வென்ற*
*பாண்டியர் ஈழநாட்டில்*
*விடை கொண்டு திரும்பிடாமல்*
*வேரூன்றி நின்றிருந்தால்*
*கடைதாவிக் குதிக்கு மிந்தக்*
*காடையர் வாழ்க்கை நின்று*
*நடை தேய்ந்து போயிருக்கும்*
*நம்மவர் செய்தாரில்லை !*

*இலங்கையை வென்ற பின்னர்*
*இராசரா சனுமதி ரும்பிட*
*இலங்கிடும் சோழநாட்டிற் (கு)*
*ஏன் வந்தான் ? ஈழமண்ணில்*
*துலங்கிடும் கொடிஎந் நாளும்*
*சோழரின் கொடியே யாக*
*விளங்கிடச் செய்திடாமல் !*
*விட்டனன் ! தவறே செய்தான் !*
*பிடித்ததை விட்டார் – நம்மைப்*
*பிடித்தவர்க் கடிமையானார்!*
*கெடுத்தனர் முன்னோர்! அந்தக்*
*கீழ்மையால் புவியெலாமும்*
*படுத்தனன் தமிழன்! அந்தப்*
*பாவிகள் செய்த பாவம்*
*அடுத்த தலைமுறைக்கும்*
*அவதியை தந்த தன்றோ?"*

"அந்தப் பாவிகள் செய்த பாவம்" எனும் வரிகளில் செறிந்திருக்கும் அவலம் எந்தத் தமிழரின் இதயத்தையும் தொடும்படியாக உள்ளது. எந்தக்காலத்துக்கும் பொருந்தும் இலக்கியத்தைப் படைக்கும் இலக்கியவாதிகளே வரலாற்றில் நினைவில் வைத்துக் கொள்ளப்படுபவர்கள். கவியரசு எழுதிய இந்த வரிகளை இன்று படிக்கும் போதும் "அப்போதே இப்படி எழுதினாரே கவிஞர்!" என்று நாம் மூக்கில் விரல் வைக்கும்படி உள்ளதே.

எமது மூதாதையரைப் பழித்த கவிஞர், இந்த நீண்ட கவிதையிலே, இளந்தலை முறையினருக்கும் ஆசி கூற மறக்கவில்லை. அந்தப் பதினாறு வரிகளை, வாய்திறந்து பாடும் போது மனதில் எழும் துடிப்புத்தான் என்னே! வல்லினத் தமிழிலே, வித்தை காட்டுவதில் கவிஞர்க்கு நிகராக எவரும் இந்நூற்றாண்டில் பிறக்கவில்லை. கவியரசு எழுதிய அந்தப் பதினாறு வரிகளைப் பாருங்கள்.

*"குருதியே ஓடினாலும்*
*குடல் நிணம் சிதைந்த போதும்*
*பரிதியின் மாலை வண்ணம்*
*படைத்தது மண்ணென்றாலும்*
*வருதுயர் தமிழுக் கென்றே*
*வாழிய பாடல் பாடி*
*உறுதியில் இறங்கு! வெற்றி*
*உனக்கிது இயற்கை வேதம்!*

www.tamilarangam.net

*மொழியின்றி விழிகளில்லை*
*மூச்சில்லை பேச்சுமில்லை!*
*கழிசடை உடமையாளர்*
*கருவிலே கயமை தோய்ந்தோர்*
*இழிமொழி வீசினாலும்*
*எடுபிடி வேலை செய்து*
*அழிவுனக் கீந்த போதும்*
*அஞ்சிடேல் பண்பு குன்றேல்!*

இந்தக் கவிதைகளை கவியரசு எழுதியபோது, அவர் தி.மு.க. அங்கத்தவராக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் அவர் எழுதிய கவிதைகளை, "வெறித்தனமான கவிதைகள்" என அவரே பின்னர் 1968ம் ஆண்டில் தனது, "கண்ணதாசன் கவிதைகள் – முதல் இரண்டு தொகுதிகள்" நூலுக்கு எழுதிய முன்னுரையிலே குறிப்பிட்டார். என்ன வெறி அது? தமிழ் வெறி தான்.

அந்த வெறி – அவர் ஈ.வி.கே சம்பத்துடன் தி.மு.கவை விட்டு விலகித் தமிழ்த் தேசியக்கட்சியை அமைத்து, அதன் பின் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த பின்னரும் மறையவில்லை. இதற்குச் சான்றாக, 1966ம் ஆண்டில் வெளியான எம்.ஜி.ஆரின் "நாடோடி" திரைப்படத்துக்கு (பத்மினி பிக்சர்ஸ் தயாரிப்பு) கவியரசு எழுதிய கருத்துச் செறிந்த – காலத்தை வென்று நிற்கும் பாடல் ஒன்று உதாரணம். படத்தின் கரு நாடோடி ஆனதால், நாடொன்று தேவை எனும் பொருள்பட எம்.ஜி.ஆரின் பாத்திரத்துக்காக அவர் எழுதிய பாடலில் நாடு எனும் சொல்லின் இரு பொருள்பட எழுதிய வரிகள் வருமாறு:

*"நாடு – அதை நாடு – அதை*
*நாடாவிட்டால் ஏது வீடு?"*

டி.எம்.சௌந்தரராஜனின் குரலில் பிரபலமான இந்தப் பாடலை கவிஞர் இலங்கைத் தமிழர்களுக்காகத்தான் அன்று எழுதினாரா என்று நினைக்கவும் தோன்றுகின்றது. வரிகளைப் பாருங்கள்:

*"பாலைவனம் என்ற போதும் நம்நாடு*
*பாறைமலை கூட நம் எல்லைக் கோடு*
*ஆறு நிலம் பாய்ந்து விளையாடும் தோட்டம்*
*வீர சமுதாயமே எங்கள் கூட்டம்"*

மேலும், கவித்துவம் பறை ஒலிக்கின்றது.

*"பசி என்று வருவோர்க்கு விருந்தாக மாறும்*
*பகைவர் முகம் பார்த்துப் புலியாகச் சீறும்*
*நிலத்தில் உயிர் வைத்து உரிமை கொண்டாடும்*
*எதிர்த்து வருவோரை உரமாகப் போடும்."*

பிற்காலச் சம்பவங்களை முற்கூட்டி கவியரசு தூரதரிசனம் பார்த்துள்ளாரா என வியக்கும் படியாக அமைந்துள்ள வரிகள். நாம் இப்போது படித்தால் – விவரணை தேவையில்லை என்ற படியாக – எட்டு வரிகளிலே உணர்ச்சியை உச்சநிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய உயிர்ப்பு நிறைந்த பாடல் இது. எம்.ஜி.ஆருக்காகக் கண்ணதாசன் எழுதிய கருத்துச் செறிவுப் பாடல்களில் இதுவும் ஒன்று.

இலங்கைத் தமிழர் அவலநிலைக்கு கண்டன ஊர்வலம் நடத்திய கண்ணதாசனை அவமதிக்குமுகமாக, இலங்கை அரசு கோபமுற்று 40 ஆண்டுகளுக்கு முன் கண்ணதாசன் பாடல்களுக்கு ஒலிபரப்புத் தடை விதித்த வரலாறும் உண்டு. இத்தடை பின்னர் தளர்த்தப்பட் டு, "பாடலை ஒலிபரப்பினால் போதும் – பெயரைக் கூறக்கூடாது " என்ற நிலைக்கு மாறியபோது,

கவியரசு வெற்றிப் பெருமிதத்தோடு முழங்கிய வரிகள் என்ன தெரியுமா? "என் பாட்டுக்களை விட்டால் அவர்களுக்கு ஒலிபரப்ப வேறு பாடல்கள் ஏதடா?" என்பதே. முற்றும் சரிதான். கவியரசு பாடல்களை ஒலிபரப்பாமல் ஒரு நாள் – இரண்டு நாட்களுக்கு மேல் இலங்கை வானொலி வர்த்தக சேவையை நடாத்த முடியுமா? – முடியாத காரியமே! அந்தளவுக்குத் தமிழில் கவிதை மழை பொழிந்தவர்.

## சீனாவின் தலைவர்கள் பற்றி

கேலி அம்புகளைச் சாமர்த்தியமாகக் கவிதையில் தொகுத்துச் சமர் புரிவதிலே, கவியரசு பதினைந்தாம் நூற்றாண்டின் கவிகாளமேகத்தின் வாரிசாக விளங்கினார். 1962ம் ஆண்டுப் பிற்பகுதியிலே, சீனா இந்தியாவை ஆக்கிரமித்தபோது, கண்ணதாசன் எழுதிய ஒரு கவிதை, 'சூ – என்–லாய்'ராக்–அன்ட்–ரோல்' என்பதாகும் அப்போது மேற்கத்திய இசையிலே பிரபலமான 'ராக் – அன்ட் – ரோல்' மெட்டிலே, அவர் தமிழ் மொழியில் செதுக்கிய கவிதை வருமாறு:

*சூ! சூ! சூ! சூ – என் – லாய்*
*தூ ! தூ! தூ! மா – சே– தூ !*
*சூடுபட்ட மாடு போன்று*
*நாடு விட்டு நாடு வந்து*
*கேடு கெட்ட வேலை செய்யும் சூ! சூ! சூ!*
*கோடு விட்டு மேலும் வந்து*
*கோழை போல ஓய்வு கொண்டு*
*கோட்டை விட்டுஓடப்போகும் சூ! சூ! சூ!*
*பஞ்ச சீலப் பண்பினூடு*
*நஞ்சுரைத்து நன்றி கெட்டு*
*பஞ்ச சீலம் ஆக்கி விட்ட சூ! சூ! சூ!*
*தங்கள் சோறு தீர்ந்த தென்று*
*தரமிழந்து நெறியிழந்து*
*எங்க சோறு தின்ன வந்த சூ! சூ! சூ!*

அப்போது கவியரசு எழுதிய கவிதை, சீன எதிர்ப்புக்கவிதை போலத் தென்பட்டாலும், அதன்பின் 1966ம் ஆண்டிலிருந்து பத்தாண்டுகள் தொடர்ந்து சீனக் கலாசாரப் புரட்சியிலே, தலைவர்கள் மாசேதுங், சூ என் லாய் போன்றோர் திறமான தலைமைத்துவத்தைக் காட்டவில்லை என்று பிற்கால வரலாறு வெளிப்படுத்திய உண்மையை நோக்கும் போது, கவிஞரின் 1962ம் ஆண்டு தீர்க்கதரிசனமான ஏளனக் கவிதையில் உண்மை படிந்துள்ளது என்பதை நாம் பின்னோக்கில் (hind sight) பார்க்கலாம்.

தனது மனவாசம் (1980) சுயசரிதை நூலிலே கவியரசு "காலத்தால் தானே சில கவிதைகள் சாகாவரம் பெறுகின்றன. 'நேரத்தால் எமந்து நிற்பசு' என்பார்கள். அப்படி நின்றான் அவனும் " என்று கவிஞர் எழுதிய நாடு – அதை நாடு" என்ற பாடலும், சூ -என– லாய் கேலிப் பாடலும் கவிஞர் எழுதிய காலத்தால் அழியாத கவிதைகளுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

## தி.மு.க. கேலிக் கவிதை

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க்கவி வரலாற்றிலே சிறப்பிடம் பெற்ற இன்னொரு கேலிக்கவிதை, கவியரசு 1963ம் ஆண்டிலே தி.மு.க தனது பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டபோது எழுதியதாகும். சீன–இந்திய யுத்தத்தின் பலனாக நேரு கொண்டு வந்த பிரிவினைத்தடுப்புச் சட்டத்தை ஒட்டி, 1963ம் ஆண்டு தி.மு.க தனது தொடக்க காலத்திலிருந்து (1949 தொடங்கி 1962 வரை) மேடையில் முழுங்கி வந்த நாட்டுப்பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட போது, கவிஞர் தி.மு.க. வை விட்டு விலகி, தமிழ்த் தேசியக்கட்சியை அமைத்திருந்தார். எனவே, தனது தி.மு.க. கால அரசியல் வாழ்க்கையையும் இணைத்து, தி.மு.க. தலைவர்களின் வரட்டு வாதங்களையும் வெளிப்படுத்தி, கவிஞர் "கைவிட்டாரே!" எனுந் தலைப்பில் நீண்டதொரு கேலிக்கவிதையைத் தமிழர்களுக்கு அளித்தார்.

மொத்தம் 128 வரிகள் அடங்கியுள்ள இக்கவிதையின் சில வரிகளைத் தெரிவு செய்து குறிப்பிடுகிறேன். தனது தி.மு.க. காலத்து வாழ்க்கையை, வரிகள் 25 இலிருந்து 34 வரை பின்வருமாறு பாடியுள்ளார். அந்தக் கட்சிக்கு முக்கியம் வாய்ந்த சொற்களாகக் (Keywords) கருதப்பட்ட, 'பகுத்தறிவு', ' முரசொலி', 'மேடை', 'தலைவர்', 'நடிகர்', 'கலைஞர்' போன்றவற்றைக் கதம்பமாகக் கோத்து எழுதினார் கவிஞர்.

www.tamilarangam.net


"அரசியலில் கட்சிமுறை அமைந்த காலம்
அறிவியலில் பகுத்தறிவு வளர்ந்த காலம்
முரசொலியோ முழவொலியோ இல்லாக் காலம்
மூடர்களும் முழங்கவந்த மேடைக் காலம்
தரமுடையோர் வாய்மூடிச் சமைந்த காலம்
தலை இல்லார் தலைவரென நடித்த காலம்
கரமொடிய வாய்கிழியக் கதறுவோரே
கலைஞரென் விலையான கடைசிக் காலம்!
அக்காலம் அரசியலில் நான் புகுந்தேன்
ஐயிரண்டு ஆண்டுகள் ஆக்கம் செய்தேன்."

பின் தி.மு.க தலைவர்கள் தங்களின் தலையான கொள்கையையே கைவிட்ட பாணியை வரிகள் 61 இலிருந்து 64 வரையிலும், மீண்டும் வரிகள் 81 இலிருந்து 96 வரையிலும் எள்ளி நகையாடினார். கவிஞரின் தமிழ் வர்ணனையில் ஏளனத்துக்கு உள்ளான அறிஞர் அண்ணாவே மயங்கிப் போனார்.

"பிஞ்சு மனத் தோழரிடம் பேசும் பொய்யைப்
பிறரிடம் பேசியவள் பேதையாகித்
தஞ்சரக்கு உழுத்த தெனத் தரையில் போட்டார்
தலைவர் சரக் கென்ன வென்று தம்பி கண்டார்!"
(வரிகள் 61–64)

"தடை எங்கே? படை இங்கே ! என்று கேட்ட
தானை யிளந் தலைவர்களே! நானுரைப்பேன்
தடை இங்கே! படை எங்கே? தலைவ ரெங்கே?
தொடை இன்று நடுங்குவதேன்! பகல் நேரத்தில்
தூக்கத்தில் புலம்புவதேன்? தோளை ஆட்டி
மடைபோலப் பேசிவரும் வார்த்தை யெல்லாம்
மழையில்லா நிலமாகிக் காய்ந்த தென்ன?
வாள் வலியும் தோள்வலியும் உடையோம் என்றீர்!
வாள் வலியைக் கண்டதிலை! ஆனால் வந்த
தோள் வலியை மருத்துவர்கள் சோதிக்கின்றார்
சோதனைக்கும் தெரியவில்லை தோளின் வீக்கம்!
ஏழ் பெரிய மருத்துவரில் ஒருவராக
எண்ணிவரும் மருத்துவரே சோதிக்கின்றார்
தோள் வலிக்குக் காரணமே தோன்றவில்லை
தூய பிரான் பல்லினில் தான் வலியென்கின்றார்!
(வரிகள் 81–96)

"தஞ்சரக்கு உழுத்த தெனத் தரையில் போட்டார் தலைவர் சரக்கென்னவென்று தம்பி கண்டார்!" எனும் வரிகளிலே அறிஞர் அண்ணாவையே கேலி செய்தார். மேலும், தடை – படை – தொடை– மடை என்ற சொற்களில் அமைந்துள்ள கேலி அம்புகளும் சுவையானவை. இதே போல, வாள்வலி– தோள்வலி– பல்வலி எனும் வார்த்தைகளிலும் தி.மு.க. தலைவர்களின் மேடைப்பேச்சுக் கலாசாரத்தை துளைத்தார்.

இக்கவிதை பற்றி கண்ணதாசன் தனது மனவாசத்திலே எழுதியுள்ளதாவது : "அது காலத்தால் நிற்கக்கூடிய கவிதையோ இல்லையோ, அண்ணா படித்து ரசித்த கவிதை அது. அண்ணா அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். 'தம்பி கண்ணதாசனின் கவிதைகளை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் எனக்குத் தமிழே தெரியாது என்று அர்த்தம்'. அண்ணாவின் பெருந்தன்மைக்கும், உயர்ந்த குணத்துக்கும் இது ஓர் எடுத்துக்காட்டு".

## கலியுகம்

தற்போதைய காலம் கலியுகம் என்று இந்துக்களால் கணிக்கப்பட்டுள்ளது. உலகில் நடக்கும் அரசியல் அலங்கோலங்கள், அட்டூழியங்கள், படுகொலைகள் யாவும் என்றோ இந்துக்கள் கணித்த காலத்தை உறுதிப்படுத்துகின்றன. கலியுகம் முடியும் நேரம் எனுந் தலைப்பிலே கவிஞர் மதுரை மீனாட்சி அம்மையின் பெயரிலே எழுதிய 72 வரிக் கவிதையும் சிறப்பு வாய்ந்ததே. சில வரிகளைப் பாருங்கள்:

"அறிவுடைய மனிதர்களும்
அகந்தையெனும் தேரேறி
ஆதிக்கம் செய்யும் நேரம்
அன்புடைய நங்கையரும்
அகமுடைய நாயகனை
அடிமை போல் எண்ணும் நேரம்
கறையுடைய நெஞ்சினரும்
திறனுடைய கவிஞர்களைக்
காலால் உதைக்கும் நேரம்
கடல்பெருகி மழை பெருகிக்
காற்றுப் புயலாக வரும்
கலியுகம் முடியும் நேரம்"

என்று கவிஞர், தனது காலத்தின் படப்பிடிப்பைத் தொடங்கி, மேலும் தொடர்கிறார்.

"தருமநெறி பொய்த்ததெனத்
தாயர்குலம் வாடுவது
தாளாது பொங்கும் நேரம்
தடியுடைய முரடர்களும்
படையுடைய தலைவர்களும்
தலைதூக்கி நிற்கும் நேரம்
கருமவினை பொய்யாகிக்
காலநெறி தவறாகிக்
கருணை பறிபோகும் நேரம்
கண்ணனவன் சொன்னபடி
கண்ணெதிரில் வந்துவிடும்
கலியுகம் முடியும் நேரம்"

சந்த பாவலப் பொருமான் அருணகிரிநாதர் தான் மீளவந்துவிட்டாரோ என வியக்கும்படியாகக், கவியரசு மதுரை மீனாட்சி அம்மனுக்காக, வல்லினத் தமிழிலே தனது வர்ணனையைச் செதுக்கினார்:

"படுவதொரு பாடு மனம்
பட்ட பினம் கூறுவது
பலித்திடும் அந்த நேரம்
பாவலரைப் போற்றாத
காவலர்கள் யாவரையும்
பழிதீர்க்கும் அந்தநேரம்
கடுமனதும் கெடுமனதும்
கால் மாறித் தடு மாறிக்
கண் மூடி வீழும் நேரம்
கண்ணனவன் சொன்னபடி
கவிஞனிவன் கேட்டபடி
கலியுகம் முடியும் நேரம்"

கலியுகத்தின் முடிவில் என்ன நடக்கும் என்பதைப் பற்றி கவிஞர் ஆரூடம், இக் கவிதையை முடித்துள்ளார்:

"கலியுலக முடிவிலொரு
புதிய யுகம் வரும் நல்ல
கவிதைகள் வாழ்ந்திருக்கும்
கடல்வானம் தீ நிலமும்
கால மெல்லாமும் அதைக்
கண் போலக் காத்து நிற்கும்
இலைபுதிது மலர் புதிது
எனுமாறு என்றென்றும்
என் கவிதை ஓங்கி நிற்கும்
இவ் வாணவம் அறிவு
இல்லார்க்கும் வரும் போது
இந்த யுகம் முடிந்து போகும்."

www.tamilarangam.net




# அதிசயம் ஆனால் உண்மை

......தி.திலீபன்....

1) தாயின் வயிற்றில் ஓர் மனிதக்குழந்தையும், குரங்குக் குட்டியும் ஒரே விதமாகவே வளருகின்றன. ஆனால் இரண்டுக்கும் பிறக்கும்போது மனிதக்குழந்தை முழுமை பெறாததாகவும், குரங்குக் குட்டியோ நிலத்தைக் கவ்விப் பிடிக்கக் கூடியதாக, பிறந்தவுடன் அசைவதற்கு வல்லமையுள்ளதாக, உரோம உற்பத்தி முழுமை, மூளை வளர்ச்சி கூட முழுமை பெற்றே பிறக்கிறது. இப்போது மனத்தில் ஓர்கேள்வி எழலாம். அப்படியாயின் ஏன் மனிதன் குரங்கைவிட வளர்ச்சியடைந்தவனாக இருக்கிறான்? குரங்கினது மூளையோ தாயின் வயிற்றில் எப்படி விருத்தியடைந்துள்ளதோ, அப்படியே தொடர்ந்தும் இருக்கும். மனித மூளையோ பிறந்த பின்பும் தொடர்ந்து வளர்கிறது. மனிதமூளை, குரங்கின் மூளையை விட மூன்று மடங்கு பெரியது என விஞ்ஞானம் கூறுகிறது. குரங்கைவிடக்கீழ்தரமாக, மனிதநாகரீகம் அற்ற முறையில் நடந்து கொள்பவர்களின் மூளையின் நிறை குரங்கை விடக் குறைவானதா? சிலருக்கு பிறந்த பின்பும் மூளைவளர்கிறதா என்பது கேள்விதான்?




2) இது 1923ன் ஜேர்மனி முத்திரைகளில் ஒன்று. இதன் பெறுமதி ஐம்பதுமில்லியன் மார்க்(ஜேர்மன்நாணயத்தின் பெயர்). ஒருமுத்திரையின் விலை இதுவெனில் பண வீக்கத்தை யோசித்துப்பாருங்கள். இக்காலப்பகுதிகளில் ஒருடாலர் இரண்டரை மில்லியன்மார்க்காக இருந்தது.முதலாவது மகாயுத்தம் முடிந்தபின் இப் பணவீக்கம் ஏற்பட்டதற்குப் பலகாரணங்கள் உண்டு. போரினால் ஏற்பட்ட பொருளாதாரவீழ்ச்சி, வேலையில்லா த்திண்டாட்டம் போன்றன முக்கிய இடத்தை வகிக்கி ன்றன. இப்படியான நிலை அமைதியில் இருந்து போருக்கும் அழைத்துச்சென்றுள்ளது. இரண்டாம் உலகயுத்தக் கர்த்தாவான கிட்லர் தேர்தலில் கொடுத்தவாக்குறுதி 'வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குதல்' என்பதும் ஒன்றாகும். இது புதியதொரு போருக்கு வழி வகுத்தது. பேரழிவுக்கு இட்டுச் சென்றது.



3) இது வட இத்தாலியைச் சேர்ந்த நோர்வாறா என்ற இடத்தைச் சேர்ந்த கண்காட்சிச்சாலையில் உள்ள தட்டெழுத்து இயந்திரம். இது 1855ஐ சேர்ந்தது. இத்தாலிய வழக்கறிஞரான ஜி. ராவிஸ்ஸா என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

4) மத்தியகிழக்கிலேயே தன்னை இந்தியாவின் நண்பன் எனக்கூறிக்கொள்ளும் முஸ்லீம் நாடானஓமானின் தலைவர் சுல்தான் அல்குபுஸ் சைவர்கள் சிவாலயம் அமைப்பதற்கு அனுமதி அளித்ததுடன் இந்துக்கள் அங்கு வாழ பிரஜா உரிமையும் வழங்கியுள்ளார். இறந்த இந்துக்களைத் தகனம் செய்வதற்கு மயானமும் அங்குண்டு. இது சுல்தானுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஒரு முஸ்லீம் நாட்டிலேயே சிவன் நிற்கத்தயார்.

எங்கும் சிவாலயங்கள்தான் உலகப்பிரசித்தியுடன் தலை நிமிர்ந்து தூர்ந்து போகாது இருக்கிறது. தஞ்சைப்பெரியகோவில் முதல் ரிசிகேஸ்வரை, கோணேசர், கேதீஸ்வரம், இந்தோனேசியாவில் இராஜராஜன் கட்டிய சிவாலயங்கள், இன்று கவாயில் விளங்கும் சுப்பிரமணியசுவாமிகளின் ஆலயம் எல்லாமே சிவாலயங்கள் தான்.

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
தமிழார்வலர்,எழுத்தாளர்,கல்லூரி,பொது நூலகமுகவரிகள் தந்துதவுக! தகவல்சேவையில் உங்கள் நாட்டு விபரங்கள் பகிர்க

www.tamilarangam.net


# நாடும் நடப்பும் --வழிப்போக்கன்--

1) நோர்வேயிலுள்ள இந்தியத்தூதரகத்திற்குத் இலங்கைத்தமிழர்கள் விசா எடுப்பதற்கெனப் போனால் இவர்கள் புலிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள்!என அறிந்த பின்பே விசாக் கொடுக்கிறார்களாம். ஆனால் தமிழ்நாடு, கேரளாவைச் சேர்ந்த மாணவர்களாய் வந்த பல இந்தியர்கள்தாம் இலங்கைத் தமிழர்! எனத் தம்மை அகதியாகப் பதிந்துள்ளனர். இல்லையேல் இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருப்பார்கள். இவர்கள் தமது சொந்தநாடான இந்தியாவுக்குச் செல்வதற்கு விசாவேண்டும். இவர்களை இந்தியத் தூதரகம் எப்படி இனம் காணும்? இதிலும் இன்னுமொரு சுவாரசியம் என்னவெனில் எமது பிரச்சனையை, எமது அவலங்களைச் சாதகமாய் தமக்குப் பயன்படுத்திப் பணம் சம்பாதித்து தம்நாட்டில் வீடு, வில்லா எனக்கட்டி, காசு காசாய் நோர்வே மண்ணில் இருந்து இறைத்துக் கொண்டிருப்பவர்கள், ஈழமக்களின் அவதிநிலைதுடைக்க ஏதாவது தாருங்கள் என இரந்து நிற்கும் போது வெறுங்கை விரிக்கிறார்கள். கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கும் என்பார்கள். ஈரமில்லாத கல்லிலும் கடைய நெஞ்சங்களை என்ன என்பது? மனிதர்களுக்கு மனச்சாட்சி உண்டென்று சொல்கிறார்களே, இவர்களைப் பொறுத்தவரையில் இது கேள்விக்குறியாகவே உள்ளது.

2) நோர்வேயில் வாழும் இளம் தமிழ்வாலிபர்கள் சிலர் போதைவஸ்துப் பாவிப்பதாக அறியப்படுகிறது. இதற்கு வழிகாட்டி விட்டவர்களும் தமிழர்கள்! என்பதை அறியும் போது மிகமிக மனவருந்த வேண்டியதாக உள்ளது. சில பெற்றோருக்கு இது தெரிந்தும் கண்டித்தால் ஏற்படும் விபரீதங்களை எண்ணிப்பயந்த வண்ணம் இருக்கிறார்கள். இப்படியான பழக்கங்களை முளையிலேயே கிள்ளி விடுவது நல்லதாகும். இதற்காக அறிவுரைகளையும், உதவிகளையும் நோர்வேயில் தாராளமாகப் பெறலாம்.

3) இருண்டகண்டம் என அழைக்கப்படும் ஆபிரிக்காவில் உள்ள ஒரு வறியநாடு சயிரே ஆகும். வறுமையின் கோரத்தாண்டவத்தாலும், போரின் கெடுபிடிகளைத் தாங்க முடியாமலும் மக்கள் அயல்நாடுகளுக்குள் இடம்பெயர்ந்தார்கள். 750000 அகதிகள் எல்லைகளில் பட்டினிச்சாவை எதிர்கொண்டு இருந்தனர். இந்நாட்டை முபுட்டு 30வருடமாக ஆண்டுவந்தவராவார். நாட்டில் வறுமை கோரத்தாண்டவம் ஆடும் போதும், மக்கள் பசியால் இறந்து கொண்டிருக்கும் போதும் சுவிஸ்வங்கியில் தனக்கென பெருந்தொகையான டொலர்களைச் சேர்த்துக் கொண்டிருந்தார். அதுமட்டுமல்ல சுவிஸ்,பரிஸ்,மொறக்கோவில் தனக்கென பல பெரிய மாளிகைகளை அமைத்திருந்தார். காற்றுள்ளபோது தூற்ற நினைத்தாரோ என்னவோ. அக்காற்று லோரன்ஸ் கபிலா என்பவரின் தலைமையிலான தீவிரவாதிகளின் பக்கமாக வீச ஆரம்பித்தது. இதன் விளைவு நாடு தீவிரவாதிகளின் கையில் தஞ்சமடைந்தது. பழைய தலைவர் முபுட்டு துண்டக்காணோம்! துணியைக்காணோம்!!என நாட்டைவிட்டு ஓட்டம் பிடித்தார். இதில் இருந்தும் நாம் படிக்கவேண்டியது நிறையஉள்ளது. ஒருவனின் தலைமையில் நாடோ, ஒருகட்சியோ,தொடர்ந்து இருந்தால் அது அழிவுப்பாதைக்கே இட்டுச்செல்லும். அவனை அறியாமலேயே அவன் சர்வாதிகாரியாகி தான்தோன்றித்தனமாக நடக்க ஆரம்பித்து விடுகிறான். சோவியத்யூனியனில் இருந்து இலங்கை, இந்திய அரசில் வரை இது நடந்துள்ளது. இவரை இவ்வளவு காலமாக ஆதரவளித்து வந்த அமெரிக்கா கடைசி நேரத்தில் மாடு சாகும்போது உண்ணிகளன்றது போல் தப்பிக்கொண்டது, மட்டுமில்லை தீவிரவாதிகளை ஆதரிக்கவும் ஆரம்பித்து விட்டது.

4) அடிப்படைநேர்மை, குறைந்தபட்ச மனச்சாட்சி என்பது மனிதனுக்கு மிகமுக்கியமானது. இது தமிழர்களிடம் மிகக்குறைந்து கொண்டு வருவது கவலைக்குரியதே. 70 ஓர ( சதம்) செலவழிக்க விருப்பின்றி வேலைசெய்யும் இடங்களில், தொழில் வாய்ப்பு நிலையங்களில் கள்ளமாக ரெலிபோன் எடுக்கிறார்கள்.

சர்வதேசதமிழரில் வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்!
ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்!
ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்தி வெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து பதியுங்கள்!
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

www.tamilarangam.net



Please subscribe this magazine for friendship,understanding,knowledge & solidarity !

உங்கள் ஆக்கங்களை கணனி அல்லது தட்டச்சில் எழுதி புகைப்படங்களுடன் அனுப்பினால் உடன்பிரசுரமாகும்.

உலகில் எங்கிருந்தும் கௌரவசிறப்பாசிரியராகச் சிறப்பிதழ் பணிபுரியவிரும்புவோர் தயவு செய்து தொடர்புறுக!




31 வைகாசி உலகின் புகைத்தலற்றநாள்

## புகைத்தலற்ற தினக்குறிப்பு

**புகைத்தலை நிறுத்தவுள்ள உமக்கு!**

விலை.50 குரோணர்

புகைத்தல்தொலைபேசிக்கு இலவசமாக சுழற்றி தினக்குறிப்பை பெற்றுக்கொள்க!

**800 400 85-புகைத்தல்தொலைபேசி**

நொஸ்க் புற்றுநோய்சங்கம்,அரசபுகையிலைபாதிப்பு சபையின் சுகாதார ஒத்துழைப்பு திட்டம்

அரசதகவல்சபையால் வழங்கப்பட்டது.அ.12.97

அலுவலகத்திலுள்ள தொலைபேசியோ, கொப்பி மிசின்களோ அலுவலகத்தேவைக்காகவே மட்டும் வைக்கப்பட்டுள்ளது. சாப்பிட்டாயா, மலசலகூடம் போனாயா, தமது வீரப்பிரதாபங்களையோ அல்லது ஒருவரைப்பற்றி மற்றவர்க்குக் கோள்மூட்டுவதற்கோ அலுவலகத்தொலைபேசிகள் வைக்கப்படவில்லை. இவர்கள் இரண்டு விடயங்களில் குற்றவாளியாகிறார்கள். ஒன்று வேலை நேரத்தை தனது சொந்தவிடயத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். இரண்டாவது தொலைபேசியை துர்பிரயோகம் செய்கிறார்கள். வேலையும் தந்து இருக்கவும் இடந்தந்தவருக்கு நன்றிகெட்டதனமாக நடப்பதற்கு எப்படி மனம்வருகிறது. நாய்க்கு இருக்கும் நன்றியுணர்வு மனிதனுக்கு இருக்க வேண்டும். நோர்வேஜிய மக்களுடன் ஒப்பிடும்போது முக்கியமாக தமிழர்கள், வெளிநாட்டவர்கள் நாட்டைச் சுரண்டியே தீர்க்கிறார்கள். சொந்த நாட்டில் வாழ இயலவில்லை! பிச்சைபோடு! எனவந்த வெளிநாட்டவர்கள் நாட்டையே பிச்சை எடுக்கப்பண்ணி விடுவார்கள் போல் தெரிகிறது. No way என்று நோர்வேக்கு வந்தார்கள். தற்போது நோர்வேயைno way ஆக்கியுள்ளது. இதன் விளைவு நிறவாதம். ரெலிபோன் விடயத்தில் நோர்வேஜியர்கள் அனேகமானவர்கள் நேர்மையுடன் நடந்து கொள்வதைப் பார்க்கும் போது ஆச்சரியப்படவே தோன்றுகிறது. நம்புபவனைத்தானே ஏமாற்றலாம்.

5) புகைபிடிக்காதவர்களுக்கு மாரடைப்பு வருகிறவாய்ப்பு புகைபிடிப்பவர்களைவிட இருமடங்காய் உள்ளது என அமெரிக்க ஆய்வுகள் தெருவிக்கின்றன. இதை நியூயோக் ரைம்ஸ் வெளியிட்டது. புகைபிடிக்காத 32000பெண்களை ஆய்வுக்கு உட்படுத்தியபோது இவ்வுண்மை புலப்பட்டது. இவர்கள் பத்து வருடமாக புகைபிடிப்பவர்களுடன் கூடி வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வுக் காலத்துக்குள்ளேயே 152 பேருக்கு மாரடைப்புத் தாக்கிக் கொண்டது. இதில் 25பேர் மரணத்தை அணைத்துக் கொண்டார்கள். ஒரு முக்கிய விடயம் என்னவெனில் பெண்களுக்கு மாரடைப்பு வருவது அரிது. இவர்கள் மார்பில் யாரையும் அடைத்து வைக்காதிருப்பதாலோ என்னவோ? புகைப்பவரைவிட புகைப்பவருக்கு அருகில் இருப்பதோ, அப்புகையைச் சுவாசிப்பதோ மிக மிக ஆபத்தானது. இனிமேல் புகையடித்தே எதிரியின் இதயத்தைப் பழுக்க வைக்கலாம்.

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையப்/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
நரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை),புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு

www.tamilarangam.net

Abonnement:90,-Nkr løssalg:15,-Nkr ISSN:0805-7443 1997/Vol.4,Nr.4

ISSN:0805-7443 சர்வதேச தமிழர் SARVADESA TAMILER

Mottaker:

Returadresse:

**Editor/Publisher:**
N.S.Pirabu
L.Hervigs v 69A,3035
Drammen, Norway
Tel./Fax:00.47.32.813416
E-Mail:nsp@sn.no

# BLAD

NORGES TAMILTIDSSKRIFT FOR INFORMASJON;
KUNNSKAP KULTUR OG SOLIDARITET.

## 27.05.1997 இலிருந்து நோர்வே,புதிய வீதிஇலக்கங்கள்:

| புதிய வீதிஇலக்கம்- | பழைய வீதிஇலக்கங்கள் | வீதிஒழுங்கு |
|---|---|---|
| ஏ39 | ஏ18,ஆர்வே1,ஆர்வே70,ஆர்வே66,ஆர்வே71 | கிறிஸ்ரியன்சான்ட்–ஸ்தாவங்கர்–பேர்கன்–மோல்ட–துரொண்கைமுக்கு தெற்கு,கிளெற் |
| ஏ75(ஒருபகுதி ஏ6உடன்பொது) | ஏ6,ஆர்வே98 | றோவைகெட்ட–வராங்கர்போட்ன்–வாடோ |
| ஏ105 | ஆர்வே 886 | பியோர்கைம்–ஸ்ரூர்ஸ்கூக் அரசஎல்லை |
| ஏ134 | ஆர்வே 11 | ட்றம்மன்–நொடோடன்–கெளக்லிபியல்–கெளகசுண்ட் |
| ஏ136 | ஆர்வே 9 | ஓலசுண்ட்–டொம்பாஸ் |
| ஆர்வே9 | ஆர்வே39 | கிறிஸ்ரியன்சான்ட்–கெளலிகிறன்ட் |
| ஆர்வே44 | ஆர்வே 1 | ஸ்ராவங்கர் |
| ஆர்வே70 | ஆர்வே 1 | கிறிஸ்ரியன்சுண்ட்–கிறி.சுண்ட்க்கு தெற்கு,பேர்க்சொயா |
| ஆர்வே 83 | ஆர்வே 850 | கார்ஸ்ராட்–றெவ்ஸ்னஸ்கப்பல்துறை–பிளெஸ்னஸ் கப்பல்துறை–லாங்க்வாஸ்புக்ட் |
| ஆர்வே 124 | ஆர்வே 105 | செக்கல்ஸ்ரன்–ஸ்றொம்பொஸ் |
| ஆர்வே 509 | ஏ 18 | ஸ்ராவங்கர் |

அரச வீதி துறை–வீதி இயக்குனர் அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது அ.14-97

## Nye vegnummer i Norge fra 27. mai 1997

| Nytt vegnummer | Gammelt vegnummer | Vegstrekning |
|---|---|---|
| E 39 | E 18, Rv 1, Rv 70, Rv 66,Rv 71 | Kristiansand – Stavanger – Bergen – Molde – Klett sør for Trondheim |
| E 75 (delvis felles med E 6) | E 6, Rv 98 | Roavvegiedde – Varangerbotn – Vardø |
| E 105 | Rv 886 | Bjørkheim – riksgrensen ved Storskog |
| E 134 | Rv 11 | Drammen – Notodden – Haukelifjell – Haugesund |
| E 136 | Rv 9 | Ålesund – Dombås |
| Rv 9 | Rv 39 | Kristiansand – Haukeligrend |
| Rv 44 | Rv 1 | Stavanger |
| Rv 70 | Rv 1 | Kristiansund – Bergsøya sør for Kristiansund |
| Rv 83 | Rv 850 | Harstad – Refsnes fergekai – Flesnes fergekai – Langvassbukt |
| Rv 124 | Rv 105 | Sekkelsten – Strømsfoss |
| Rv 509 | E 18 | Stavanger |

**Statens vegvesen**
Vegdirektoratet

Innrykket av Statens informasjonstjeneste A-14/97

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்